
JAFFNA ... UNDERGRADUATE ... MAY 19..

# பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறுவதில் மோசடி

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★ ★




# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 93
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 1 ரபி. அவ்8 வெள்ளிக்கிழமை [15-5-70]




கொழும்பு, வியாழன்

கொழும்பு ரெஜிஸ்ட்ரார் ஜெனரல் காரியாலயத்திலிருந்து, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படுவதில் மோசடிகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்ட புகார்கள் பற்றி பொலிஸ் உளவு பிரிவினர் விசாரணைகள் நடத்திவருகிறார்கள்.

பிரஜைகள் அல்லாதவர்களுக்கு குறிப்பாக கள்ளக் குடியேற்றக் காரர்களுக்கு பிறப்புப்பத்திரங்கள் கொடுக்கக்கூடிய வகையில் இலங்கைப் பிரஜைகளின் பிறப்புப்பற்றிய பதிவேடுகளில் மேற்குறித்தவர்களின் பெயர்கள் இடைசெருக்கல் செய்யப்பட்டிருப்பதாக உளவு பொலிசார் கருதுகிறார்கள்.

இந்த நிலைமைகளை பயன்படுத்தி பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் பெற்றவர்கள் என்று கருதப்படும். புறக்கோட்டையிலுள்ள பலரை உளவு பொலிசார் விசாரணைசெய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

(சி. பி. ஏ.)

## நூல் உருவில் இராமநாதன வாழ்க்கை வரலாறு

கொழும்பு, வியா

சேர். பொன்னம்பலம் இராமநாதனுடைய வாழ்க்கை வரலாறு ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஏறக்குறைய 500 பக்கங்கள் அச்சாகி முடியுந் தறுவாயில் உள்ளது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் இவ்வரலாற்றை எழுதியுள்ளார்.

வரலாற்று மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதலாம் பாகத்தை அடுத்து இரண்டாம் பாகமும் வெளிவர இருக்கிறது. இந்நூலில் சேர் பொன் இராமநாதனின் தீர்க்கதரிசனப் பார்வையின் பெருமையைக் காணலாம்,

இந் நூல்கள் சிறந்த முறையில் வெளிவருவதற்கு நிதி உதவி செய்ய விரும்புபவர்கள், சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கத்துடனே அல்லது கிழக்கிலங்கை கடதாசி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. சி. தங்கராசாவுடனே தொடர்பு கொள்ளலாம்.

# மாஸ்கோ 'லுமும்பா' பட்டதாரி கைது!
# 'சேகுவேரா' தலைவரென சந்தேகம்

## சுழல் துப்பாக்கி, றைபிள் வெடி மருந்துகள் சிக்கின

— நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம் —

**'சேகுவேரா' இயக்கத்தின் தலைவரெனக் கருதப்பட்ட ஒருவர் மாத்தறையில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

இவர் மாஸ்கோ லுமும்பா பல்கலைக் கழகப் பட்டதாரி எனச் சொல்லப்படுகிறது.

இவர் கைது செய்யப்பட்ட பொழுது இவரிடம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சுழல் துப்பாக்கி ஒன்றும், 31 சுற்றுச்சுடக்கூடிய ... ஒரு ... ச்சுகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவரைத் தீவிர

"இந்த நிலை நீடித்தால்

## மாங்குளம், முறிகண்டி சிங்களக் குடியேற்றமாகிவிடும்"

மாங்குளம், வியாழன்

"வவனியாத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு சிவசிதம்பரம், தான்பண்டார வன்னியனின் மறுபிறப்பு எனநினைத்து வருகிறார் அவர் மறுபிறப்போ அசல் பிறப்போ எனக்குத் தெரியாது. எதிர்வரும் 27ம் திகதி இப்பகுதி மக்கள்தான் அதைத் தெரியப்படுத்துவார்கள். யார் ஆட்சியில் இப்பகுதியில் சிங்களக் குடியேற்றம் பெருகிய தென்பதை மக்கள் அறிவார்கள், இப்படியே போனால் மாங்குளம். முறிகண்டி இடங்களிலும் அவர்கள் குடியேறிவிடலாம்.

இவ்வாறு வவனியாத் ... ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார்.

திரு. ஆலாலசுந்தரம்பேசுகையில் மேலும் கூறியதாவது:-

நாம் 14 பேர் ஓட்டிவந்த கப்பலில் மூன்று ஓட்டைகள் இருந்துவந்தன. அவற்றை அடைப்பதற்குஐந்து வருடங்களைச் செலவு செய்தோம் அவற்றை இம்முறை வவனியாவிலும் உடுப்பிட்டியிலும் அடைப்பார்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே அடைத்துவிட்டார்கள்.

செனட்டர் எஸ். நடராசா பேசுகையில் பாகிஸ்தானில் ஜின்னாவைப் போன்று, தமிழ் நாட்டில் வண்ணாவைப் போன்று

## தமிழிலும் வங்கியாளர் பயிற்சிதேர்வு!

கொழும்பு, வியா

இலங்கை வங்கியாளர் வரலாற்றில் முதல் தடவையாக பல இடங்களில் வங்கியாளர் பயிற்சித் தேர்வு தமிழில் நடைபெறுகிறது.

மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே தமிழிலும் இத்தேர்வு நடைபெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

தேர்வு வினாத்தாழில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே கேள்விகள் இருந்து வந்தது. இதனை மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருந்தது.

## புனருத்தாரணம் செய்த யாழ் டச்சு தேவாலயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ளே உள்ள 'டச்சுத் ... யில், கிருத்தவ ஐக்கியம் இன்று பழைய இந்த டச்சுத் தேவாலயத்தைத் திரும்ப ...

## 'போராடி உரிமை பெறும் கட்சி தமிழரசுதான்'

— செ. இராசதுரை

மாவிட்டபுரம், வியாழன்

"டட்லியும் ஸ்ரீமாவும் செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் செய்ய முன்னின்றார்களே தவிர திரு. பொன்னம்பலத்திடம் போகவில்லை. டட்லி-செல்வாவுடன் ஒப்பந்தம் செய்ததன்மூலம் மாவட்டசபை உருவாக ஏதுவாக இருந்தது. அதை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்- ஆர். ஜி. சேனநாயக்கா- ஹேமா பஸநாயக்கா போன்றோர் எதிர்த்தார்கள். இதனால் அது நிறைவேறவில்லை பின்னர் தமிழ்மொழி விசேஷ சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்போது பிக்குகள் கொதித்தெழுந்து இது சிங்கள மக்களுக்குச் செய்த துரோகம் என்றார்கள். என்றாலும் தமிழரசு இறுதிவரை போராடியது. மீண்டும் போராடிஉரிமைபெறும் கட்சி தமிழரசுதான்."

இவ்வாறுஉடுவில்தொகுதி வேட்பாளர் திரு. தர்மலிங்கத்தை ஆதரிக்குமுகமாக ஏழாலை தமிழரசு வாலிப முன்னணியின் ஆதரவில் ஏழாலையில்நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் மட்டக்களப்பு முன்னாள் எம். பி. திரு. செ. இராசதுரை கூறினார். திரு. எஸ். முருகேசு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழரசுக்கட்சி கடந்த காலத்தில் என்ன செய்தது என்று கேட்கிறார்கள். திரு. பண்டாரநாயக்கா 24மணித்தியாலத்தில் தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்நடத்துவதாகச்சொல்லிவிட்டு லண்டனுக்குப்போய் இருந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...தென்பதை மக்கள் அறிவார்கள், இப்படியே போனால் மாங்குளம். முறிகண்டி இடங்களிலும் அவர்கள் குடியேறிவிடலாம்.

இவ்வாறு வவனியாத் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. மா செல்லத்தம்புவை ஆதரித்து மாங்குளத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய கிளிநொச்சித் தமிழரசு வேட்பாளர் திரு. மு. ...னவே அடைத்துவிட்டார்கள்.

செனட்டர் எஸ். நடராசா பேசுகையில் பாகிஸ்தானில் ஜின்னாவைப் போன்று, தமிழ் நாட்டில் அண்ணாவைப் போன்று ஈழத்தமிழ்மக்களுக்கு ஒரு செல்வா என்பதை ஈழத் தமிழ் மக்கள் உணரத் தொடங்கிவிட்டனரென்றார்

திரு. வஸ்தியாம்பிள்ளை உட்படப்பலர் பேசினர்.

...லுமே கேள்விகள் இருந்து வந்தது. இதனை மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டித்திருந்தது,

...உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சுழல் துப்பாக்கி ஒன்றும், 31 சுற்றுச்சுடக்கூடிய வெடிமருந்துகளும், ஒரு றைபிளும், 5 காட்டிறிச்சுகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவரைத் தீவிர விசாரணைக்கு உட்படுத்த ஒரு விசேஷ இரகசியப் பொலிஸ் குழுவொன்றுகொழும்பிலிருந்து மாத்தாறைக்குச் சென்றுள்ளது.

அண்மையில் கவர்னர் ஜெனரலிடம் பிரதமர் கையளித்த அறிக்கையில், இப்புரட்சிகர இயக்கத் தலைவர் பி என். வீஜயவீரா எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கைது செய்யப்பட்ட நபரின் பெயரைச் சொல்ல பொலிசார் மறுத்துவிட்டனர்.

‘மகாவலித் திட்டத்தின்மூலம்

# எமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யலாம்’

**— வி. குமாரசாமி**

புத்தூர், வியாழன்

“வாலிபர்களின்வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்துவைப்பது ஆட்சிமன்ற உறுப்பினர்களின் கடமையாகும். குளங்களை கட்டுவித்து குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்துப் படித்த வாலிபர்களைக் குடியேற்றுவதன் மூலம் இப்பிரச்னையை ஓரளவு தீர்க்கமுடியும். அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் இத்தொகுதியில் தொழிற்சாலைகளை நிறுவுவதன்மூலம் வாலிபர்களின் பிரச்னையை தீர்க்கலாம்”

மறவன்புலோ தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் ஆதரவில் மறவன்புலோவில் நேற்று நடந்த தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வே குமாரசாமிபேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. செ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது;

“குளங்களைக் கட்டுவதன் மூலம் விவசாயத்தை அபிவிருத்தி செய்யமுடியும். கடந்த 14 வருடங்களாக விவசாயத்தை அபிவிருத்தி செய்ய இப்பகுதியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மகாவலி கங்கை வடக்கே வருவதன் மூலம், தமிழ்ப்பிரதேசங்களின் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்யலாம்.”

திருவாளர்கள் எஸ். பி. மயில்வாகனன், இ. இராசகுலேந்திரன், ரி. குலேந்திரராசா ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர்கள்.

## தமிழரசு பற்றி டட்லி என்ன சொல்கிறார்’.

### ஜி ஜி விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

“எமது உரிமைகளைத் தரும் எந்த சிங்களக் கட்சிகளுடனும் வருங்காலத்தில் நாம் சேர்ந்து கொள்ளத் தயார், எனக் கூறும் சமஷ்டிக் கட்சியை இனிமேல் எந்த ஒரு சிங்களக் கட்சியும் தம்முடன் சேர்த்துக் கொள்ளமாட்டாது. சமஷ்டிக் கட்சியின் ஆதரவைப் புறக்கணித்தே, கிழக்கு மாகாணத்தில் இவர்கள் போட்டியிடும் 9 தொகுதிகளிலும் தமது கட்சி போட்டியிடுகின்றது, எனப் பிரதமர் டட்லி செனநாயக்கா கூறியிருக்கிறார்”

இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தலைவர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம், யாழ்ப்பாணம் மாட்டின் றேட் சந்திக்கருகாமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி அந்தோனியார் சாமிநாதர் ஜே. பி. தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், திரு. சி. மோதிலால் நேரு, திரு. ஏ. அன்ரனி, திரு எஸ். ஸ்ரீதரன், முதலியார் முத்துத்தம்பி, திரு, ஜி. ஆரோகணம், செல்வன் எஸ். தேவராசா ஆகியோரும் பேசினர். (தே. நி)

## நினைவு விழா

யாழ்ப்பாணம், சனி

நாலர் பெருமான் கந்தபுராணசபையின் அதரவில் கொக்குவில் சைவவாலிபர் சங்கம் இம்மாதம் 15-ம் திகதி ஸ்ரீஞானபண்டிதவித்தியாசாலையில் காசிவாசி செந்திநாதஐயரின் நினைவு நாளை கொண்டாட ஒழுங்கு செய்துள்ளது.

வித்துவான் க. கணபதிப்பிள்ளை, சைவப்புலவர் த. குமாரசாமிப்பிள்ளை உட்படப்பலர் இதில் உரையாற்றுவர்.

## புனருத்தாரணம் செய்த யாழ் டச்சு தேவாலயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ளே உள்ள ‘டச்சுத் தேவாலயம்’ சுமார் ஒரு லட்சம் ரூபாய்வரை செலவு செய்து புணருத்தாரணம் செய்தபின்னர் நேற்றுமாலை பொதுமக்கள் தரிசனத்துக்கு விடப்பட்டது.

உலகச் சேச்சபைக் கௌரவ தலைவர் வண. டாக்டர் டபிள்யூ ஏ வின் செ’ன்டுகூவ்டு மேற்படி ‘டச்சுத் தேவாலயத்துக் கதவைத் திறந்து வைத்தார்.

திறந்துவைத்த டாக்டர் வின்செ’ன்டுகூவ்டு பேசுகையில், கிருத்தவ ஐக்கியம் இன்று பழைய இந்த டச்சுத் தேவாலயத்தைத் திரும்பவும் திறக்கச்செய்திருக்கின்றது. வண டாக்டர் நயில்ஸ் வண கண்டி போன்றவர்களது அளப்பரிய சேவையைப் போற்றக் கூடியது. யாழ்ப்பாணத்து பக்தியானவர்கள் அன்பாக இருந்தபடியாலே இதுநடைபெறுகிறது என்றார்.

நெதலன்டுத் தூதுவர் திரு சீ ஜீ வேடொங்குவிவ் நாங்கலும், பாரியாரும் விசேட அதிதிகளாக இங்கு அழைக்கப் பட்டிருந்தார்கள்

டச்சுத்தூதுவரே கூடுதலான பொருளாதார உதவியை மேற்படி ‘டச்சுத் தேவாலயம்புணருதாரணம் செய்யக்கொடுத்தது. வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு ஜே எம் சபாரத்தினம், முன்னாள் பல்கலைக்கழகப் பேராசிரியர் நேசையா உடபட பலர் தேவாலய திறப்புவிழாவில் கலந்து கொண்டார்கள். (கு வி ம)

## இன்று

வண்ணை, கில்னர்லேன் முத்துமாரியம்மன்கோவிலில் இன்று தொடக்கம் பத்து நாடகள் உற்சவத்தில் இன்று மாலை 7-00மணிக்கு வசந்தமண்டப பூசைக்குப்பின் கேடகத்தில் வீதிவலம் வரும் காடசியும் நடைபெறும். தினமும் மாலை8-30 தொடக்கம் 9-30 வரை திரு. எஸ். கணேசசுந்தரம் கதாபிரசங்கம் நிகழ்த்துவார்

மடடுவில், வெள்ளி

விளைவேலி விவசாயிகள் நலன் பேணுசங்கத்தாரின், பத்தாவது ஆண்டு நிறைவு விழா இன்று மட்டுவில் தெற்கு அம்பலந்துறை கந்தசாமி கோவிலில் திரு. வல்லிபுரம் மயில்வாகனம் தலைமையில் நடைபெறும்

...கொதித்தெழுந்து இது சிங்கள மக்களுக்குச் செய்த துரோகம் என்றார்கள். என்றாலும் தமிழரசு இறுதிவரை போராடியது. மீண்... பண்டாரநாயக்கா 24மணித்தியாலத்தில் தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்நடத்துவதாகச்சொல்லிவிட்டு லண்டனுக்குப்போய் இருந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

### பத்து வருடத்துக்கு முந்திய

## எனதுதீர்க்கதரிசனத்தையே தமிழரசு இன்று கூறுகிறது

### சாடுகிறார் துரையப்பா!

யாழ்ப்பாணம், வெள்ளி

“கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் துறையில் தமிழினத்திற்கு ஏற்ற வழி என நான் கண்ட தீர்கதரிசனத்தையே இன்று இலங்கை தமிழரசுக் கட்சியினர் தமது கொள்கையாகக் காட்டிக் கொண்டு தமிழினத்தின் உரிமைகளைத் தர முன்வரும் எந்த ஒரு பெரும்பான்மை கட்சியையும் தாம் ஆதரிக்கத் தயாராக இருப்பதாக கூறுகிறார்கள்”

இவ்வாறு நேற்று இரவு யாழ்ப்பாணம் பீச்றேட கொட்டடி, ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் தம்மை ஆதரிக்குமுகமாக நடந்த கூட்டமொன்றில் யாழ்ப்பாணம் சுயேச்சை வேட்பாளர் திரு, அல்பிரட் துரையப்பா கூறினார்.

இந்தக்கூட டத்திற்கு திரு. மா. பிலேந்திரராஜா தலைமைதாங்கினார்.

திரு. துரையப்பா தொடர்ந்து பேசுகையில், யாழ் மாநகரசபை மேயர் தேர்தலில் ஒன்று சேர்ந்த இரு தமிழ் கடசிகளும், தமிழினத்தின் நன்மைக்காக ஆட்சிமன்றத்தின் உள்ளும் புறமும் சேர்ந்து உழைத்திருந்தால் இன்று தமிழினத்தின் மத்தியில், ஏதாவது உரிமைப் பிரச்னைகள் உருவாக முடியுமா? எனவே, இவைகள் உண்மையான அரசியல் ஞானிகள் அல்ல, வெறும் அரசியல் வாதிகளே, எனவேதான் இவர்கள் இன்றுவரை எது பிரச்னைகளுக்கும் தீர்வு காணவில்லை (மட்டு நி)

# தமிழர் உரிமைகளையே நாம் பெரிதாக கருதினோம்’

## திருமலையில் வி. என். நவரத்தினம்

திருக்கோணமலை, வியா.

‘கடந்ததேர்தலில்பின்தமிழரசுக்கட்சிக்கு மூன்று முழு மந்திரிப்பதவிகளும் மூன்று அரைமந்திரிப் பதவிகளும் தருவதற்கு திரு. டட்லிசேனநாயகா முன்வந்தார். ஆனல் தமிழரசுக்கட்சியினர் மந்திரிப்பதவியல்ல தமிழ்மக்களின் உரிமைகளே எமக்கு முக்கியம் என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தினார்கள்’ என முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் திருக்கோணமலையிலுள்ள தமிழரசுவாலிபமுன்னணிக்கிளைகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அவர்தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

‘ஐக்கியதேசியக்கட்சியோடு சேர்ந்து 1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கத்தை அமைத்த தமிழரசுக் கட்சியினர் அக்கட்சியினால் ஏமாற்றப்பட்டனர், ஏமாந்தனர் என்று இன்று ஒரு சிலர் சொல்லிவருகிறார்கள், நாங்கள் ஏமாறவுமில்லை, ஏமாற்றப்படவுமில்லை’.

‘1962-ம்ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பலம் குறைந்த கட்சியாயிருந்தபடியாலும், அவர்கள்மூலம் எமது இழந்த உரிமைகளைப் பெற முடியாது என்பதினாலும் ஐ. தே. கட்சியைஆதரிக்கஎமது செயற்குழு முடிவுசெய்தது. இதனால் பலமுள்ள ஐக்கிய தேசியக்கட்சியோடு சேர்ந்து அரசாங்கம் அமைத்தோம்.

1965-ம் ஆண்டு தேர்தல் முடிந்தவுடன் நமது ஆதரவை நாடிஓடிவந்தார் திரு டட்லிசேனநாயகா நாங்கள் பலமுறை மறைந்தும் அவர் எங்களை விடவேயில்லை. நமது தந்தை செல்வாவை இரகசியமாகச்சந்தித்து நமக்கு மூன்று முழுமந்திரிப் பதவியும். மூன்று அரைமந்திரிப் பதவியும் தருவதாகக்கூறி, எம்மைத் தம்முடன் சேரும்படி வற்புறுத்தினார். ஆனல் எமதுதந்தை செல்வா மந்திரிப்பதவிக்காக உங்களோடு ஒத்துழைக்க முன்வரமாட்டோம் என்று கூறி எமது

(4-ம் பக்கம் பார்க்க)

## “சிங்களவருடன் ஒத்து வாழ்வது பற்றி 1948-ல் கூறினேன்”

தாவடி, வெள்ளி

சிங்களமக்களுடன் ஒத்து வாழவண்டும் என்று நான் 1948-ம் ஆண்டில் கூறியதை இப்போது தமிழரசுக் கட்சி கூறுகிறது. தமிழரசுக்கட்சியை எந்தச் சிங்களக் கட்சியும் சேர்க்க மாட்டாது”. என கோண்டாவில் மேற்கு காளிகோயில் முன்றலில் நடைமெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசும் போது, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

நல்லூர்த் தொகுதி வேட்பாளர். திரு. சி. அருளம்பலத்தை ஆதரிக்குமுகமாக நடந்த இக்கூட்டத்திற்கு புறற்டர். திரு. வே. விஞசித்தம்பி தலைமைவகித்தார்

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

“நான் மந்திரிப்பதவியிலிருந்தகாலத்தில் 4 பெருந் தொழிற்சாலைகளை அமைக்க வழி செய்தேன் யாழ்ப்பாணத்திலே பல்கலைகழகம் அமைவது சிறப்புடையதாகும் என மட்டக்களப்பில் பிறந்த விபுலானந்த அடிகள் கூட 25 வருடங்களுக்கு முன்னரே கூறினார். திருகேணமலையில் இருந்து இரண்டு மூன்று மாணவர்களும் மட்டக்களப்பிலிருந்து நாலைந்து மாணவர்களுமே வருடாவருடம் பல்கலைக்கழகப் படிப்புக்குச் செல்லுகின்றார்கள். ஆனல் யாழ்ப்பாணத்திலிருந்து 500 க்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதை தமிழரசுக்கட்சி உணராதது ஏன்? மற்றும்.

உடுவில் தொகுதி வேட்பாளர் திரு. ந. சிவனேசன், திரு. யோகநாதன், திரு. தி. சண்முகராசா, திரு. இரத்தினசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

# ‘ஒன்றிற்கும் அதிகமான சூடுகள் இறந்தவர் உடலைத் துளைத்திருந்தன’

## கொடிகாமம் ஐயா கொலைவழக்கில் டாக்டர் சாட்சியம்

மட்டுவில், வியாழன்

ஒன்றிற்கும் அதிகமான துப்பாக்கிச் சூடுகள், இறந்தவரின் உடலைத் துளைத்திருந்தன மிகவும் கிட்டிய தூரத்தில், சுமார் ஐந்து அல்லது ஆறு அடி தொலைவில் வைத்து சுடப்பட்டதைத் தொடர்ந்தே, அதிக இரத்தம் விரயமாகியதாலும், அதிர்ச்சி ஏற்பட்டதின் காரணத்தினாலும், அவர் இறந்திருக்க வேண்டும். ஒரே ஒரு குண்டுமட்டும் அவர் விலா எலும்பு கோர்வையில் பட்டு, கீழ் நோக்கிச் சென்று எலும்புகளில் தங்கி இருந்ததையும் நான் அவதானித்தேன்’.

இவ்வாறு கொடிகாமம் இ. போ. ச. பஸ் சாரதியான ‘ஐயா’ என்றழைக்கப்படும். சின்னப்பொடி வேலு கொலைவழக்கில், அவர் உடலைப் பிரேத பரிசோதனை நடத்திய, சாவகச்சேரி சட்ட வைத்திய அதிகாரியான, டாக்டர் அம்பலவாணர் வைத்திலிங்கம், சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் இன்று சாட்சியமளிக்கையில் கூறினார்.

இந்தக் கொலை வழக்கில் இ. போ. ச. பஸ் சாரதியும், கொடிகாமம் வாசியான சின்னப்பொடி வேலு என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக, அச்சுவேலியைச் சேர்ந்த தம்பி முத்து கணேசமூர்த்தி, தம்பி முத்து நவரத்தினம், மஸ்கோலியாவைச் சேர்ந்த பெருமரள் இராமலிங்கம் ஆகிய மூவர்மீதும், இதற்காக விசேஷமாக நியமிக்கப்பட்டிருந்த பொலீஸ் கோஸ்டி, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து வழக்குத்தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கு இன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு என். கதிர்காமநாதன், முடிக்குறிய தரப்பில் ஆஜராகி வழக்கை நடத்தினார். வழக்கறிஞர் திரு எஸ். அம்பலவாணர் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானார். சவேச்சேரி சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வைத்லிங்கம் தொடர்ந்து தனது சாட்சியத்தில் கூறியதாவது:

இக்கொலை சம்பந்தமாக, இறந்தவரான சின்னபொடி வேலு, அல்லது ஐயா என்பவரின் உடலை நான் பிரேத பரிசோதனை நடத்தினேன். இவரின் உடலை, வேலு குணரத்தினம் என்ற இறந்தவரின் மகனும், சின்னப்பொடி கந்தையா என்ற அவரின் சகோதரரும் எனக்கு அடையாளம் காண்பித்தனர்.

இறந்தவரின் உடலில் சுமார் ஒன்பது காயங்கள் காணப்பட்டன. அவரின் வயிற்றில் உணவு ஓரளவு ஜீரணமான நிலையில் இருந்தது. ஆனல் லாகிரிவஸ்துள்ள பானங்கள் எதுவும் மணக்கவில்லை. மேல் விசாரணை அடுத்த மாதம் 5ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

அச்சகம்:
கே. கே. எஸ். வீதியிலிருக்கும் "தமிழ்நாடு" அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு இராசையா சோமசுந்தரம், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. 2230

வீடு வளவு:
சுண்டிக்குளியில் கச்சேரி கல்லூரிகளுக்கு அண்மையில் உடனடியாக குடி வரக் கூடிய காலியானதும், 3 படுக்கை அறைகள், சுறேச் வசதிகளுடன் கூடியதுமான 3 பரப்பு காணியுள் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ் இராசரெத்தினம், C/o சுந்தரம் பிறதர்ஸ், 73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 2121

கடை:
யாழ்ப்பாணம் பெரிய கடை ஆஸ்பத்திரி வீதியில் பெரிய வியாபார நிலையம் விற்பனைக்கு உண்டு. கடிதம் மூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல. 2227, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2227

## தேவை

தாதிமாராகப் பயிற்றுவிப்பதற்கு கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த பெண்கள் தேவை. ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். 20-5 70 திகதிக்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய், சுழிபுரம். 2228

## காணவில்லை

ஏப்பிரல் மாதம் 24-ந் திகதி மாலை கிளிநொச்சி - யாழ்ப்பாணம் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது ஒரு சிறிய சூட்கேஸ் தவறிவிட்டது. அதற்குள் சில கொப்பிகளும், சேட்டிபிக்கேற்றுகளும் உள. தகவல் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். வ. சுப்பிரமணியம், சாந்தி பவனம், கோட் றோட், மல்லாகம். 2231

WANTED

Wanted for Co-operative Hospital, Moolai, Chulipuram Laboratory Technologists. Salary according to qualification and experience. Please apply to President with full particulars. Clossing date 20th May, 1970 2229

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m
Poya, Pre-poya 4 Shows
Burt Raynolds.
Nicoletta Machiaveli
in
NAVAJO JOE
(adults only)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
அ/போயா, போயா 2-30 மணி
ரங்கராவ் - மாஸ்டர் பிரபாகன் நடித்த
பக்த பிரகலதா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
எம்.ஜி.ஆர்-அஞ்சலிதேவி நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா, பிரி போயா
4 காட்சிகள்
ஜீவனும்சம் லக்ஷ்மி-ராஜ்குமார் நடித்த
கோவாவில்
சி. ஐ. டி. 999
(தமிழ்)


விஸ்வமடு, வியா
வற்றாப்பளைப் பொங்கலை முன்னிட்டு இம்மாதம் 18ம் திகதி விஸ்வமடு மாணிக்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் தண்ணீர் பந்தல் ஒன்றை அமைப்பதற்கு விஸ்வமடு விவசாயப்படையைச் சேர்ந்த வீரர்கள் ஒழுங்கு செய்துள்ளனர்.


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஷம்மிகபூர் ராஜ்ஸ்ரீ நடித்த
பிரமச்சாரி


# வேட்பாளர் அறிமுகம்

## வவனியாத் தொகுதி

### ரி. சிவசிதம்பரம்
(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வேட்பாளராகிய திரு. ரி. சிவசிதம்பரம் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்களதும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸாரினதும் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்றவர்.



உறுதியான பேச்சு, செயலாற்றிம் திறன்படைத்தவர். வன்னிப் பிராந்தியத்தில் சுதந்திரத் துக்குப் போராடியபண்டார வன்னியனுக்கு விழாவெடுத்துத் தனது பிறந்தநாட்டின் பெருமையை அகில இலங்கையிலும் அறியச்செய்தவர் 1960-ம் ஆண்டிலிருந்துவவனியாத்தொகுதியின் பிரதிநிதியாக இருந்து வரும் திரு. ரி. சிவசிதம்பரம் முல்லைத் தீவைச் சேர்ந்த முள்ளியவளையைத் தாயகமாகக் கொண்டவர்.

1926-ம் ஆண்டில் பிறந்த திரு. சிவசிதம்பரம் தனது பிறந்த இடமாகிய தண்ணியூற்றிலுள்ள அமெரிக்க மிஷன் கல்லூரியில் ஆரம்பக்கல்வி கற்றவர் முல்லைத்தீவு ஞேமன்கத்தோலிக்க பாடசாலையிலும் படித்த இவர் திருகோணமலை இந்துக்கல்லூரியிற் சேர்ந்து கற்று மற்றிக்குலேஷன்பரீட்சையிற் சித்தியெய்தினுர். அரசாங்கசேவையில் விவசாய உத்தியோகத்தராகச் சேர்ந்து பல்லாண்டு பணியாற்றினுர்.

தன்னுடைய தொகுதியில் சொந்த ஊரிலுள்ளவர்களே பிரதிநிதிமாகவேண்டுமென்ற ஆர்வமுடன் உணர்ச்சி பொங்க அரசியலில் பிரவேசித்தவர். நல்ல தமிழ் ஞானமும், உரையாற்றும் வன்மையும் படைத்தவர் திரு சிவசிதம்பரம். இவரை நண்பர்களும் சிவா என்றே அன்புடன் அழைப்பர்.

0 0 0



### எக்ஸ். எம். செல்லத்தம்பு
(தமிழரசுக் கட்சி)

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

யாழ்ப்பாணம், வவுனியா மன்னுர், மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் காரியாதிகாரியாகக் கடமையாற்றியவர். தமிழ் உணர்ச்சியும், தமிழுரிமை வேட்கையும் கொண்ட இவர் பொதுப்பணி ஆற்றுவதில் முன்னணியில் திகழ்பவர்.

தமிழ்ப் பிரிவுகளில் பணிபுரிந்துவருகின்ற காரியாதிகாரிகளுள் முதன்முதலாக உதவி அரசாங்க அதிபராக உயாந்த பெருமை இவருக்குள்ளது.

முதன்முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபராக சேவை புரிந்தார். காணி உதவி ஆணையாளராகவும், இரத்தினபுரி மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபராகவும் பணிபுரிந்தார்.

இவர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் "வவுனியாத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் பலரது வேண்டுகோளுக்கு இணங்கவும், தமிழ் ... யாக வாழ்ந்து வரும் ... செல்வா அவர்களது வேண்டுகோள் காரணமாகவும் வைத்து நாம் வாழ, நாடு உயர, உழைக்கும் இலட்சியக் கட்சியாக விளங்கும் தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்கும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

0 0 0

### எஸ். பத்மநாதன்
(கம்யூனிஸ்ட் கட்சி)

கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளில் மிகவும் ஈடுபாடுடையவர் இவர்.

இவர் ஒரு விவசாயியாகவே வாழ்கிறுர். விவசாயத்தில் மிகுந்த பற்றுடையவர் வவனியாப் பகுதியின் மரண விசாரணை அதிகாரியாகவும் இவர் பணிபுரிந்துள்ளார். தனது கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்கு மிகவும் அக்கறையோடு உழைத்துவருபவர். வவனியாப் பகுதியில் பல்வேறுபட்ட சமூக ஸ்தாபனங்களிலும் பொறுப்புள்ள பதவிகளை வகித்துவருகிறுர்.

0 0 0

### எஸ் எம் கே சுபசிங்க
(சுயேச்சை)

இருபது ஆண்டுகள் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. எஸ். எம். கே. சுபசிங்க தற்போது ஆயுர்வேத வைத்தியராக விளங்குகின்றுர்.

முறிவு வைத்தியத்துறையில் இவர் தேர்ச்சி பெற்று விளங்குகிறுர்.

0 0 0

### ஏ டி ஏ செனிவிரத்ன
(சுயேச்சை)

சமூகப்பணிகளில் ஈடுபாடுடையவர் இவர். பல்வேறுபட்ட சமூக சமய ஸ்தாபனங்களிலும் பதவிகள் வகித்துள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 15—5—70

(செய்திகள்: காலை 6 45,

## பயிர்கள் அழிவு

யாழ்ப்பாணம், சனி
வட்டக்கச்சி, கல்மடு, இராமநாதபுரம், முரசுமோட்டை, பரவிப்பாஞ்சான், திருவையாறு ஆகிய ...களில் சிறுபோக வேளாண்மை மழையினுல் பாதிக்கப்பட்டுள்ளது. சிறுபோக வேளாண்மையைத்

## 'ஒரே கட்சியிலிருந்து போராடுவோம்'

யாழ்ப்பாணம் வெள்ளி
தமிழருக்கு தற்போதுஇக்கட்டான காலம். தமிழரிடையே பல கட்சிகள் உதயமாகிவிடுவதால், தமிழ்ச்சமூகம் சின்னுபின்னமாக்கப்படுகிறது. தமிழினம் ஒரே கட்சியின்கீழ்போராட்டம்நடத்தினுல் தான் உரிமைகளைப் பெறமுடியும். இதற்கு உகந்த கட்சி தமிழரசு ஒன்றே தான்'

இவ்வாறு நல்லூர் வேட்பாளர் டாக்டர் ஈ.எம். வி. நாகநாதனை ஆதரித்து திருநெல்வேலியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்பேசுகையில் அட்வகேட் சி. பொன்னையா கூறினுர்.

இளைப்பாறிய நீதிபதி திரு தம்பித்துரை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது

— —

## கொலை வழக்கு

வல்வெட்டித்துறை, வியா
கரவெட்டியைச் சேர்ந்த கே. வன்னியசிங்கம் எஸ். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் இவ்வருடம் சித்திரை மாதம் 4-ந் திகதி கரவெட்டி அரசடி இலகடிச் சந்தியில் வைத்து வே. ஆனந்தனை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக பருத்தித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே, விக்னராசாவால் விசாரணைக்காக இம்மாதம் 17ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## '19 பேரும் போனுல் தான் உரிமை பெறலாம்'

— எஸ்.ஜே.வி.

மாவிட்டபுரம், வெள்ளி
'ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், யு. என். பி.க்கும் வாக்களித்தால் தமிழ்மக்கள் இரண்டாம்தரப் பிரஜையாகவே வாழ நேரிடும் தமிழ்மக்கள் உரிமைபெற்று வாழவேண்டுமானுல் ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட வேண்டும்'

இவ்வாறு காங்கேசன் துறைத் தொகுதியில் தமிழ... செல்வநாயகம் பேசுகையில்:

சிங்களவர்கள் தமிழினம் வாழக்கூடாதென்ற அபிலாசையுடன் இன்று வாழ்கின்றனர். இந்நிலையில் நாம் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். தமிழரசுக்கட்சியின் 19 வேட்பாளர்களையும் ஆட்சிமன்றத்திற்கு அனுப்

# "என் தொகுதிக்கு என்ன செய்தேன்?"

## திரு. அழகக்கோன் விளக்கம்

முசலி, வியாழன்
மன்னுர்ப்பிரிவில் விவசாயத்துக்கு உயர்நாடியாக இருக்கும் கட்டுக்கரைக் குளம் அருவியாற்றில் ஓடிவரும் தண்ணீரைக்கொள்வதற்குத்தகுதியற்றிருந்தமையினுல் ஏராளமான நீர், கடலுட் பாச்சப்பட்டது. இதன் காரணமாய் கட்டுக்கரைக்குளத்தின் அணைக்கட்டு 12 லட்சம் ரூபாய் செலவில் செப்பனிடப்பட்டு இன்று உயர்ந்த அணைக்கட்டாகக்கட்டிய படியால் அது போதியளவு தண்ணீரை தேக்கிவைக்கக் கூடியதாக இருக்கின்றது.

மன்னுர்ப்பகுதி மீன்பிடித் தொழிலில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது மன்னுர் மீன் இலங்கையில் எல்லாப்பாகங்களிலும் விரும்பிச் சாப்பிடப்படுகின்றது இதனுல் மன்னுரில் உள்ள மீன்பிடித்தொழிலை விருத்தி செய்ய மன்னுரில் தகரத்தில் மீன் அடைக்கும் தொழிற்சாலையை உண்டு பண்ணினேன். இதனுல் மன்னுர்ப்பகுதியில் உள்ள இளைஞர்களின் வேலையில்லாத்திண்டாட்டம் ஒரளவு நிவிர்த்தி செய்யப்பட்டது"

மேற்கண்டவாறு மன்னுர்த் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. வி. ஏ. அழகக்கோன் முருங்கனில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுா.

மன்னுர்வாழ் மக்களின் சுகாதார வசதியை முன்னிட்டு மன்னுரில்ஒரு பிரதம வைத்தியசாலையைத் தாம் 4 லட்சம் ரூபா செலவில் அமைக்கக் காரணமாயிருந்ததாவும் முருங்கனில் ஒரு பொதுதபால் கந்தோர்கட்டிடத்தை அமைத்துள்ளதாகவும், அரிவியாற்றைக் கடப்பதற்கு பெருந்தொகை செலவில்பாலம் அமைக்கப்பாடுபட்டதாகவும் அவர் சொன்னுர்.

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு ஏ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், உட்படபலர் உரையாற்றினர்.

கொழும்புத்துறை, வியா
அரியாலை என்னுமிடத்தில் சிவஞானம் செல்வரத்தினம் (23 வயது) என்ற இளைஞர் இரவில் வீட்டின் பின்புறத்தில் சென்று நீர் அள்ளும் போது துலாவின் கயிறு அறுந்ததினுல் கிணற்றில் தவறி விழுந்து மாண்டார்.


## விளம்பரம்

கேள்வி விளம்பரம்
பட்டண சபை, பண்டத்தரிப்பு

பின்வரும் ரோட்டு வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் 29-5-70 முற்பகல் 10 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுப்பணமாக ரூபா 25-00ம் கேள்விப்பத்திரக் கிரயமாக ரூபா 5-00ம் செலுத்தியதின் பேரில் 25-5-70 பிற்பகல் 3-00 மணி வரை இக்கந்தோரில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படும். அனுபவம் வாய்ந்த ஒப்பந்தகாரர் ரூபா 25-00 செலுத்தி இச்சபையில் பதிந்து கொள்ளலாம்.

1 சில்லாலை வீதி திருத்தம்.

ரே. சூசைப்பிள்ளை,
தலைவருக்காக,
பட்டணசபை,
பண்டத்தரிப்பு.
பட்டணசபை காரியாலயம்,
பண்டத்தரிப்பு,
12-5-70. 2268

அரசாங்கக் கேள்விகள்
வவனியாக் கச்சேரி
என் 1728-வவனியா மாவட்ட அரசாங்க அதிபரால் வவனியா மாவட்டத்தில் கட்டிட வேலைகள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஷம்மிகபூர்
ராஜ்ஸ்ரீ
நடித்த
# பிரமச்சாரி

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
6வது வாரம்
சிவாஜி, கே ஆர் விஜயா
நடித்த
# திருடன்

வின்ஸர் 6 வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
# தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
# சர்வாதிகாரி

வெற்றிகரமான 3வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்
# நம் நாடு
(ஈஸ்ட்மென் கலர்)

கிங்ஸ்லி கொழும்பு
தினசரி 2-00, 6-00, 9-30 மணி
காந்தாராவ் - பாரதி
நடித்த
# மாய மோதிரம்

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வெள்ளி 15—5—70**

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

*344 மீ. அன்ட் 61 மீ.*

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரிந்தமிழ், 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிநிகழ்ச்சி, கள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

*344 மீ. அன்ட் 49 மீ.*

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

*344 மீ. அன்ட் 61 மீ.*

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம் 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-10 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராம சஞ்சிகை, 7-15 புல்லாங்குழல், 7-45 விளையாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

விஞ்ஞாபனத்தில் "வவுனியாத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் பலரது வேண்டுகோளுக்கு இணங்கவும், தமிழ் மக்களது வழிகாட்டியாக வாழ்ந்துவரும் தந்தை செல்வா அவர்களது வேண்டுகோள் காரணமாகவும் எனது பதவியைத் துறந்து வவுனியாத் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வேட்பாளராக முன் நிற்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட முறையில் எவரையும் ஆதரிக்காது இலட்சியம் ஒன்றை முன்

## கோப்பாய் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி வடமாநிலக் கல்விப் பகுதியினரால் நடாத்தப்பட்டு வரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி கோஷ்டியும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக் கோஷ்டியும் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி விளையாட்டுத் திடலில் விளையாடின, மூன்று ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தையும் கடைசி ஆட்டத்தையும் கோப்பாய் பெற்று வெற்றியீட்டியது. இரண்டாவது ஆட்டத்தை அத்தியார் பெற்றது. புள்ளி விபரம்; 1-வது ஆட்டம் 15—9, 2வது ஆட்டம் 15-8, 3-வது ஆட்டம் 15-10, போட்டிக்குத் திரு. கே. தங்கராசா மத்தியஸ்தம் வகித்தார்.

வட்டக்கட்சி, கலமடு, இராமநாதபுரம், முரசுமோட்டை, பரவிப்பாஞ்சான், திருவையாறு ஆகிய இடங்களில் சிறுபோக வேளாண்மை மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது. சிறுபோக வேளாண்மையைத் தொடர்ந்து, செப்பனிட்ட வயல்களில் இடைப்போக மாவது செய்யக் கமக்காரர்கள் அரசாங்கத்திடமிருந்து மேலும் விதை நெல்லை எதிர்பார்க்கிறார்கள்.

## அமெரிக்க அறிஞர்கள் கலந்துகொள்வர்

கொழும்பு. வியா வடபகுதியில் புதைபொருளாராய்ச்சிப் பகுதியினர் சுதேசிய கலாச்சாரம் சம்பந்தமான மதிப்பீடு ஒன்றை நடாத்தவிருக்கின்றனர். இம்மதிப்பீடு சம்பந்தமான ஆராய்ச்சியின் போது பென்சில்வேனியா நூதனசாலையைச் சேர்ந்த மூன்று அமெரிக்க அறிஞர்களும் இணைந்து செயலாற்றுவார்கள்.

இம்மதிப்பீடு அடுத்த மாதம் ஆரம்பமாக இருக்கின்றது. வடமாகாணத்தில் கிடைக்கப்பெற்ற உரோம நாணயம், மற்றும் ஏனைய தகவல்கள் ஆகியவற்றைத் தொகுத்து அறிக்கை அமெரிக்காவிலும் இலங்கையிலும் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜையாகவே வாழ நேரிடும் தமிழ்மக்கள் உரிமைபெற்று வாழவேண்டுமானால் ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட வேண்டும்'

இவ்வாறு காங்கேசன் துறைத் தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை ஆதரித்து கருகம்பானையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தீவுப்பகுதி தமிழரசு வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

திரு. எஸ். சேதுகாவலர் தலைமையில் கூட்டம் நடந்தது.

திரு. எஸ். ஜே. வி

றனர். இந்நிலையில் நாம் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். தமிழரசுக்கட்சியின் 19 வேட்பாளர்களையும் ஆட்சிமன்றத்திற்கு அனுப்பினால்தான் தமிழர் ஒற்றுமையாக இருக்கின்றனர் என சிங்களவர்கள் நினைப்பர்.

திரு. வி. தர்மலிங்கம் செல்வி திலகமணி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

பண்டத்தரிப்பு,
12-5-70. 2268

அரசாங்கக் கேள்விகள்
வவுனியாக் கச்சேரி

என் 1728-வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் வவுனியா மாவட்டத்தில் கட்டிட வேலைகள் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கல்வித் திணைக்களம்

என் 1726-யா/கனிட்ட தொழில் நுட்ப பாடசாலையிலும் யா/நல்லூர் ஆசிரிய கலாசாலையிலும் கட்டிட வேலைக்குரிய கேள்விப்பத்திரங்கள் 1970-6-7ம் திகதி முற்பகல் 10-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

முழு விபரங்களுக்கும் 1970-5-15ம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

G. P. 2793

"ஈழநாடு" வெற்றிக்கேடய

# 'வலைப்பந்தாட்ட' போட்டிகள்

## பாடசாலைகளிடையே ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி கல்விஇலாகாவினால் யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே நடாத்தப்படும், வலைப்பந்தாட்ட, கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. வலைப்பந்தாட்டப் போட்டியில் சாம்பியனாக வரும்பாடசாலைக்கு 'ஈழநாடு'' வெற்றிக் கேடயமும், கரபந்தாட்டத்தில் சாம்பியனாக வரும் பாடசாலைக்கு ''கிறீடா'' வெற்றிக்கேடயமும் பரிசளிக்கப்படும்.

வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ள ''கீழ்ப்பிரிவுப்'' பாடசாலைகளின் விபரம் வருமாறு: சாவகச்சேரி மகளிர் மத்திய வித்தியாலயம், முத்துத்தம்பி மத்திய வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் பாடசாலை, வேம்படிமகளிர் கல்லூரி, யாழ்டன் கல்லூரி, பண்டத்தரிப்பு, மகளிர் கல்லூரி, இளவாலை கொன்வென்ற், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

மேற்பிரிவில் பங்கு பற்றும் பாடசாலைகளின் விபரம் வருமாறு: சாவகச்சேரி மகளிர் மத்திய வித்தியாலயம், டிறிபேக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, யாழ்டன் கல்லூரி மகஜனக் கல்லூரி, இளவாலை கொன்வென்ற், உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

கரபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் ''கீழ்ப்பிரிவு'' பாடசாலைகள் சிங்கள மத்திய வித்தியாலயம்- வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி.

கரபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் ''மேற்பிரிவுப்'' பாடசாலைகளின் விபரம்: உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, சிங்கள மத்திய வித்தியாலயம் அத்தியார் இந்துக் கல்லூரி கோப்பாய் கிறிஸ்டியன் கல்லூரி சிதம்பராக் கல்லூரி மட்டுவில் மத்திய வித்தியாலயம்.

இந்தச் சுற்றுப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் அடுத்தும் இம்மாதம் 30-ம் திகதி யாழ். கோட்டை மைதானத்தில்நடைபெறும்.

(தே. நி)

தமிழ், ஆங்கில மொழிகளில்

# அச்சு வேலை எதுவானாலும்

எங்களையும் விசாரியுங்கள்

எமது வர்த்தக அச்சகப் பகுதியில்

- ✶ கடிதத் தலைப்புகள்
- ✶ அறிமுக அட்டைகள்
- ✶ பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
- ✶ புத்தகம் கட்டுதல்
- ✶ புதியவகைப்பற்றுச்சீட்டுப்புத்தகங்கள்
- ✶ பெரிய பதிவுப் புத்தகம்
- ✶ கோடடித்தல்

ஆதியன.

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிறார்கள்.

சிறந்த சேவையே எமது நோக்கம்

# ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)

தொலைபேசி: 389 த. பெ. எண்: 49,
63, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனன் அரசுக்கு இஸ்ரேலின் கடுமையான எச்சரிக்கை

## 'கொரில்லா தாக்குதல் நீடித்தால் மீண்டும் தாக்குவோம்'

டெல்அவிவ், மே 14

லெபனனிலிருந்து அரபுக் கொரில்லாக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தி வருவார்களானால் இஸ்ரேல் மீண்டும் லெபனன் மீது தாக்குதல்களை நடத்தத் தயங்காது என்று இஸ்ரேல் உதவிப்பிரதமர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இப்பொழுது ஒட்டாவாவில் இருக்கும் இஸ்ரேல் வெளிநாட்டு அமைச்சர் திரு. அபாஎபானும் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். லெபனனுடன் இஸ்ரேலுக்கு சண்டையெதுவும் கிடையாது. எல்லைப்பாதுகாப்பு சம்பந்தமாக லெபனனுடன் ஒப்பந்தம்செய்துகொள்ளவும் இஸ்ரேல் தயாராய் இருக்கின்றது. ஆனால் லெபனனுக்குள்ளிருந்து கொண்டு அரபுக்கொரில்லாக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல்நடத்திக்கொண்டிருப்பார்களானால்நாமும் தொடர்ந்து தாக்குவோம் அந்த வகையில் இப்பொழுது இடம்பெற்றிருப்பது முதல் தாக்குதல் என்று தான் கூறவேண்டும் என்றூர் திரு எபான்.

ஐ. நா. பாதுகாப்புசபை நேற்று இஸ்ரேல் நிலைமை பற்றி ஆராய்ந்தபொழுது இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள, அரபுப் பிரதேசங்களிலிருந்து அவர்களை வெளியேறிச் செல்லும்படி கட்டாயப் படுத்தும்படி சோவியத் பிரதிநிதி இதர வல்லரசு நாடுகளை கேட்டுக்கொண்டார்.

பிரிட்டிஷ் பிரதிநிதி கெரடன் பிரபு பேசுகையில் மேற்காஸியாவில் அமைதி ஏற்படுவதற்கு முதலில் அங்கு ராணுவ நடவடிக்கைகள் யாவும் முற்றுப் பெறவேண்டும் என்றூர்,

### 55 அரபுக் கொரில்லாக்கள் விடுதலை

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலியர் சிறைப்பிடித்துச் சென்ற அரபுக்கொரில்லாப் படையினரில் 55 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர். ஜோர்டான் நதியின் மறுகரையில் வைத்து இந்த அரபுக் கொரில்லாக்கள் விடுதலை செய்யப்பட்டனர்,

# மகாராஷ்டிர கலவரங்களில் இதுவரை 125 பேர் பலி

புதுடில்லி, மே, 14

மகாராஷ்டிரத்தில்இடம் பெற்றுள்ள இனக் கலவரங்களில் இதுவரை 125 பேர் பலியாகியிருக்கிறூர்கள்.

நேற்று இடம்பெற்ற கலவரங்களின்போது பொலிஸ் சுட்டதில் இருவர் பலியானூர்கள் நேற்று சில இடங்களில் தீவைப்பும் கொள்ளையடித்தலும் இடம்பெற்றன.

பிவாந்தியிலும் மற்றப் பகுதிகளிலும் நேற்று அமைதி நிலவியது. இன்று ராஜ்யத்தில் பொதுவாக அமைதி திரும்பிவிட்டதாக அதிகாரிகள் கூறினூர்கள். என்றூலும் குழப்பங்களில் ஈடுபடுகிறவர்களைக் கண்டவுடன் சுடும்படி ராஜ்யமுதலமைச்சர் உத்தரவிட்டிருக்கிறூர். கலவரம் நடைபெற்ற இடங்களைப் பார்வையிடுவதற்கும் கஷ்டங்களுக்குள்ளானவர்களைக் கண்டு ஆறுதல் கூறுவதற்கும் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி விரைவில் மகாராஷ்டிரத்துக்கு போகவிருக்கிறூர்.

மகாராஷ்டிரத்தில் பிவாந்தி என்ற ஊரில் முதலில் கலவரம் ஆம்பித்தது. மூஸ்லிம் மன்னர்களை எதிர்த்துப் போராடிய மராட்டிய மன்னர் சிவாஜியின் நினைவு விழாவின்போது மோதல்கள் ஏற்பட்டன, அதைத் தொடர்ந்து ராஜ்யத்தின் பல பகுதிகளிலும் சிறுபான்மை மக்களுக்கும் பெரும்பான்மை மக்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. இந்த மோதல்களில் சிறுபான்மை மக்களே பெரிய அளவில்பாதிக்கப்பட்டார்கள் என்று நேற்று முன்தினம் இந்திய உள்துறை மந்திரி சவான் லோக் சபையில் அறிவித்தார்,

## எம் ஜி.ஆருக்கு விருந்தில் விருப்பமில்லை

பரங்கிமலை, மே 14

எம். ஜி. ஆர். தனது தொகுதியான பரங்கிமலையில் பல இடங்களுக்கும் சென்று பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

இங்குள்ள அனகா புத்தூரில் அறிஞர் அண்ணுவின் பெயரால் அமைக்கப்பட்ட பஸ் நிலையத்தை திறந்து வைத்ததோடு அதையடுத்து இப்பகுதி ஊராட்சி மன்றத் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற பெற்றூர் தினவிழாவிலும் கலந்து கொண்டு பேசினூர்.

இன்னும் சிட்லபாக்கம் கிராமத்தில் புதிதாகஅமைக்கப்பட்ட விவசாயக்கிடங்கு மதிய உணவு நிலையங்களைத் திறந்து வைத்ததோடு மக்கள்வரிப் பணத்தில் மாலைகள் போடுவதையோ விருந்துகள் வைப்பதையோ தவிர்க்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

—

## லண்டனில் வைஜயந்தி நாட்டிய நிகழ்ச்சி

லண்டன், மே 14

பரதநாட்டியம், கதகளி நடனங்களைக் கண்டுகளிக்...

## தெ.வியட்னும் படைகளுக்கு கம்போடியாவில் கடும் எதிர்ப்பு

சைகோன், மே 14

கம்போடிய படைகளுடன் இணைப்பு ஏற்படுத்திக்கொள்ளும்விதத்தில் தென்வியட்னும் படைகள் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கும் அதேவேளையில் வடவியட்னும் படைகளும் வியட்... கூறுகின்றன.

தென்வியட்னும் படைகள் கம்போடிய படைகளுடன் இணைப்பு ஏற்படுத்திக் கொண்டு அகதிகளைப் பரிமாறிக்கொள்ள முயற்சி எடுப்பதாகக் கூறப்படுகின்றது...

## லெபன் காலமானூர்

லண்டன், மே 14

லண்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் ஜி எச். ஜி. லெபன் காலமாகியுள்ளார். இவர் இலங்கை சர்வகலாசாலையில் முதலாவது புவியியல் பேராசிரியராகக் கடமை...

## 'அவர்களுக்கும் எமக்கும் அநேகவித்தியாசம்'

— திரு. கதிரவேலுப்பிள்ளை

கோப்பாய், வியா

48-ம் ஆண்டில் தமிழ்க் காங்கிரஸ் காட்டிய வழியையே தமிழரசுக்கட்சி இன்று பின்பற்றிவருதாக மேடைகளில் தவறுன வழியில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது ஒத்துழைப்பின் மூலமே பலன்பெற முடியுமென நாம் ஒருபோதும் அபிப்பிராயமடையவில்லை. தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் அன்று யூ. என். பி. அரசாங்கத்துடன் சேர்ந்ததற்கும் 65-ம்ஆண்டு நாங்கள் அரசாங்கம்அமைத்தற்கு ஒத்துழைப்பு நல்கியதற்கும் பெரும் வித்தியாசங்கள் உள்ளன. இவற்றை மக்கள் சிந்தித்தாலே இரு தமிழ்கட்சிகளுக்கு மிடையேயுள்ள அபிப்பிராய பேதங்களை அறியமுடியும்.''

இவ்வாறு நீர்வேலியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேர்தற்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கோப்பாய் முன்னூன் பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கூறினூர்.

அவர் மேலும் பேசியதாவது: ''47-ல் தமிழ்மக்களின் சார்பாக அன்றைய யூ. என். பி.யை எதிர்த்துப்போட்டியிட்ட தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் 48-ம் ஆண்டு ஆட்சி மன்றத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்துச்சிறிதளவும் கவலையின்றி, அரசாங்கத்தை எதிர்க்க ஆற்றலற்றவர்களாய் பதவியை வாங்கி உரிமைகளை விற்றூர்கள். இதனூல் 10 லட்சம் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டனர். சிங்களக்குடியேற்றம் பரவியது. தமிழர்களது சகல உரிமைகளும் நசுக்கப்பட்டன. ஆனூல் 65-ம் ஆண்டில் நாம் பிரதமருடன் தமிழ்மக்களின் உரிமைகளுக்காக ஒப்பந்தம் செய்தோம். தேசிய அரசாங்கம்அமைக்க ஆதரவளித்தோம். சிங்களத் தலைவர்களுக்குப் பதவியை அளித்து உரிமைகளைப்பெற்றது தமிழரசுக்கட்சியின் சாதனையாகும்.''

### சிங்களத்தலைவர்கள் உணர்ந்து விட்டனர்

அடுத்து மட்டக்களப்பு அபேட்சகர் திரு. செ. இராசதுரை பேசுகையில்,

''தமிழ்ப்பேசும் மக்கள் அனைவரையும் ஒரே அணியில், ஒரேகொடியின்கீழ் ஒன்றூக்கி அவர்களின் அரசியல் உரிமைளுக்காக கடமையுணர்ச்சியுடன் தொண்டாற்றி வருவது இலங்கை தமிழரசுக் கட்சியேயாகும். எமதுஉரிமைகளைப்பெற்றுத் தரத்தக்கது தமிழரசுக்கட்சிதான் என்பதை கிங்களத் தலைவர்கள் உணர்ந்துவிட்டார்கள். ஆகையினூலேதான் தமிழ்மக்களின் உரிமைகள் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கும் ஒப்பந்தங்கள்செய்வதற்கும் தமிழரசுக்கட்சியையே நாடுகின்றனர்'' என்றூர்.

உடுப்பிட்டி அபேட்சகர் திரு. கே. ஜெயக்கொடி, அட்வகேட் திரு. பொன்னையா உட்பட பலர் பேசினர்.

## 'ஆசிரியருக்கும் மாணவருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்'

பருத்தித்துறை, வியா

'ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் நெருங்கிய உறவு நிலவுதல் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாத ஓர் அம்சமாகும், மாணவரின் நன்மையையும் விருப்பு வெறுப்புக்களையும் நன்குணர்ந்த ஆசிரியரே அம் மாணவரைச் சிறந்த எதிர்காலப் பிரஜைகளாக்க முடியும் எனவே ஆசிரியர்களை நிர்வாகக்காரணங்களுக்காக இடமாற்றஞ் செய்வதால் வருங்காலச் சந்ததியினர் பாதிக்கப்படுவர்.

இவ்வாறு தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் ... பெறும் திருமதி பொன்னம்மா சுப்பிரமணியத்திற்களித்த பிரிவுபசார விழாவிற் பேசுகையில் குறிப்பிட்டார். ஆசிரியசங்கத் தலைவர் திரு. ஆ. டே. போல் தலைமைதாங்கினூர். திரு. இ. செல்லத்துரை வரவேற்புரைவழங்கினூர்.

தொடர்ந்து பேசிய திரு சீனித்தம்பி இடமாற்றங்கள் காரணமாக அரசியல் பாடசாலைகளில் நுழைகின்றது என்றும் அந்நிலைமை திருத்தப்பட வேண்டுமென்றும் கூறினூர். இளைப்பாறிய தலைமைஆசிரியர் திரு. க. முருகேசு உட்படப்பலர் ...

## 'மொழிப் பிரச்னைக்கு தீர்வு காண வழி'

உடுவில், வியா

'சிங்களமக்களுடன் நேரடித்தொடர்பு கொண்டு அவர்களுடைய மனதை மாற்ற முயலாமல் சிங்களக் கட்சிகளுடன் மாத்திரம் நாம் ஒத்துழைத்து எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. இதுவரை தமிழ்க்கட்சிகள் இதைச் செயல் படுத்தத்தவறியதே எமது தோல்விக்குக் காரணம். நாடெங்கும் சிங்களத்துடன் தமிழும் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதே எமது கொள்கை இதையடைவதற்கும் மொழிப்பிரச்னையை முடிவாகத் தீர்ப்பதற்கும், சிங்களவாலிப முன்னணிகளுடனும் சிங்களப்பொது மக்களுடனும்எமது வாலிப முன்னணிகள் கருத்துக்களைப் பரிமாறி நட்பை வளர்த்தல் அவசியம்'

உடுவில் தொகுதி வாலிப முன்னணியின் சுயேச்சை அபேட்சகரான திரு குமாரசாமி விநோதனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு கே விநோதன் மேற்கண்டவாறு கூறினூர்

உடுவிலில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருவாளர்கள் சண்முகநாதன், எஸ் சுசிதர், பண்டிதர் இராபாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்

## 'சிங்களவராகப் பிறந்திருந்தால் கல்வி அமைச்சராக இருப்பார்'

மாவிட்டபுரம், வியாழன்

''சிங்கள இனத்தில் எமது வட்டுக்கோட்டை காங்கிரஸ் வேட்பாளர் பிறந்திருந்தால் இன்று கல்வியமைச்சராகியிருப்பார். கல்வி அமைச்சராகும் தகைமை வாய்ந்தவர் தமிழரில் இவர் ஒருவர் தான்'' என வட்டுக்கோட்டைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு. ஆ. தியாகராசாவை ஆதரித்து காரை நகரில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலம் கூறினூர்.

திரு. பொ. நாகரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசியதாவது:

பல்கலைக்கழகம் வடக்கில் கட்டாயம் அமைக்கப்படுவது உறுதி. யாழ்ப்பாணப் பிள்ளைகள் தமது கல்வியில் முன்னேற இங்கு பல்கலைக் கழகம் அமைவது உறுதியாகிவிட்டது.

56-ம் ஆண்டுக்கு முன் தமிழ் இனம் சம உரிமை பெற்று வாழ்ந்தது. தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக தமிழசார் எப்போது அனுப்பப்பட்டனரோ அன்றுமுதல் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டுவருகின்றன.

வேட்பாளர் திரு. ஆர். தியாகராசா உட்பட திருவாளர்கள் எஸ். ஆர். எஸ். தேவதாசன், காதர் முகமது இன்னும் பலர் உரையாற்றினூர்கள்.

— —

## ''உரிமையைப் பாதுகாக்க வழி''

சங்கானை, வெள்ளி

''கடந்த பதின்ஐந்து வருடம் தமிழ் இனம் தவறுன வழியில் அரசியல் தலைவர்களால் வழிநடாத்திச் செலலப்பட்டுள்ளது இதனூல் தமிழர் தம் உரிமைகளை இழந்து விட்டனர். ஆகவே நாம் ஒற்றை ஆட்சியின்கீழ் பெரும்பான்மைச் சமூகத்தின் நல் இணக்கத்தோடு வாழ்ந்தால்தான் எமது உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி இந்நாட்டில் நிலைக்க வழிபிறக்கும். வேலை இல்லாத் திண்டாட்டம் போன்றவற்றை ஓர் அளவில் தீர்க்கும் வாய்ப்பும் கிட்டும்'' இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு.ஏ. தியாகராசா சங்கானை பிரதான வீதியில் தமிழ் காங்கிரஸ் தேர்தல் காரியாலயத்தை திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கம்போடியாவில் கடும் எதிர்ப்பு

சைகோன், மே 14

கம்போடிய படைகளுடன் இணைப்பு ஏற்படுத்திக்கொள்ளும்விதத்தில் தென்வியட்னும் படைகள் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கும் அதேவேளையில் வடவியட்னும் படைகளும் வியட்காங்கியரும் கம்போடியாவுக்குள்ளிருக்கும் தென்வியட்னும் படைகள் மீது பலத்த கூட்டுத்தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

இதேசமயம், கம்போடிய தலைநகரை நோக்கி வியட்காங் படைகள் பெரும் பலத்துடன் நகர்ந்துகொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

தென்வியட்னும் படைகள் கம்போடிய படைகளுடன் இணைப்பு ஏற்படுத்திக்கொண்டு அகதிகளைப் பரிமாறிக்கொள்ள முயற்சி எடுப்பதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் கம்பேரடியாவில் அமெரிக்கப் படைகள் கம்யூனிஸ்ட் நிலைகளைத் தகர்ப்பதில் மாத்திரமே ஈடுபடுத்தப்படுகிருர்கள் என்றும், கம்போடிய அரசுக்கு ஆதரவாக அவர்கள் அனுப்பப்படவில்லையென்றும் அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

## ஆசிரியர் மாணவர்களின் சைக்கிள் சுற்றுலா

பருத்தித்துறை,வியா

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைச் கைப்பணிப் பயிற்சியைச் சேர்ந்த திருவாளர்கள் த. செந்தில்நாதன், ச. சுப்பிரமணியம் அ. நடராசசுந்தரம் ஆகிய மூவரும் இலங்கையின் பல பகுதிகளையும் சைக்கிளில் சுற்றிப்பார்த்து மீண்டனர்.

இவர்கள் தமது சுற்றுலாவின்போது திருக்கேதீஸ்வரம், மடு, மன்னர், மிகுந்தலை, அனுராதபுரம், புத்தளம், முனீஸ்வரம். நாத்தாண்டியா. நீர்கொழும்பு கொழும்பு, காலி, கதிர்காமம் வெள்ளவாயா, தியலுமா, இங்கினியாகல, அம்பாறை, மட்டக்களப்பு, வாழைச்சேனை, பொலன்னறுவை, சிகிரியா, கந்தளாய், திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய இடங்களூடாகச் சென்று இறுதியில் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர், இவர்கள் ஏறக்குறைய 1250 மைல் பிரயாணம் செய்தனராம்.

## காலமானார்

லண்டன், மே 14

லண்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் ஜி எச். ஜி. லெபன் காலமாகியுள்ளார். இவர் இலங்கை சர்வகலாசாலையில் முதலாவது புவியியல் பேராசிரியராகக் கடமையாற்றியிருக்கிருர்.

பேராசிரியர் லெபன் இங்கு கடமையாற்றிய பொழுது இலங்கை சர்வகலாசாலையில் புவியியல் போதனுபீடத்தை அமைத்து, அதற்கு நவீன தோற்றம் அளிப்பதற்கு மூலகர்த்தாவாக விளங்கினுர். இவரது முயற்சிகள் காரணமாகவே வானிலை ஆராய்ச்சிநிலையம் இங்கு ஆரம்பிக்கப்பட்டு, தனித்த ஓர் அரசாங்க ஸ்தாபனமாக இயங்கிவருகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுற்றுப்பயணம்

விஸ்வமடு,வியா

இம்மாதம் 19ம் திகதி அகில இலங்கை சுற்றுப்பிரயாணம் ஒன்றை விஸ்மடு விவசாயப்படையைச் சேர்ந்த 80 வீரர்கள் மேற்கொள்ளவிருக்கின்றனர். இவர்கள் ஒருவாரகாலத்திற்கு தங்கள் விடுமுறையைச் சுற்றுப் பயணத்தில் கழிப்பர். இக்குழுவுக்கு விஸ்மடுமுகாம் உதவி அதிபர் திரு எஸ். கதிரவேல் தலைமை தாங்குவார்.

## லண்டனில் வைஜயந்தி நாட்டிய நிகழ்ச்சி

லண்டன், மே 14

பரதநாட்டியம், கதகளி நடனங்களைக் கண்டுகளிக்கும் அரிய வாய்ப்பு விரைவில் லண்டன் ரசிகர்களுக்கு கிட்டவிருக்கிறது. லண்டனிலுள்ள வெல்ஸ் தியேட்டரில் இம்மாதமும், அடுத்த மாதமும் இக் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பிரபல இந்திய நடிகையான வைஜயந்திமாலாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி மே 17, மே 24-ந் திகதிகளில் அரங்கேற்றப்படும். வைஜயந்திமாலாவினதும், அவரது நடன இசைக் கோஷ்டியினரதும் கலா நிகழ்ச்சிகளை இந்திய நவகலாமன்றத்தினர அளிக்கின்றனர்.

கேரளத்திலிருந்து கதகளி நடனக்குழு ஒன்று ஜூன் 22-ம் திகதியிலிருந்து 28-ந் திகதிவரை தமது நடனநிகழ்ச்சிகளை லண்டனில் அரங்கேற்றும்.

## 'அந்தப் பெருமை செல்வாவுக்கே'

வேலணை, வியா.

'1956-ம் ஆண்டு தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழிஉரிமையை இழந்த காலம், அந்தக்காலத்தில் தமிழரசுக்கட்சி இந்நாட்டின் 35 லட்சம் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காகப் பாடுபட்டது'' என சுருவில் சனசமூகநிலைய முன்றலில் சுருவில் கிளையினுல் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தை ஆதரித்து நடத்தப்பட்ட தேர்தல் கூட்டத்தின் போது மட்டுநகர் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. செ. இராசதுரை கூறினுர்.

திரு. வி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தின்போது திரு. இராசதுரை தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

''தமிழ்பேசும் மக்களை சாதிசமய வேறுபாடின்றி ஒரு கொடியின்கீழ் கொண்டுவந்த பெருமை தந்தை செல்வாவையே சாரும். தமிழ்மக்களுடைய உரிமைகளைப் பற்றிப் பேசும் கட்சி தமிழரசுக்கட்சியேயாகும்.

ஆட்சிமன்றத்திலும் அரசகருமத்திலும் என்றும் எப்பொழுதும் தமிழை நிலைநாட்டிய பெருமை பண்டிதர் இரத்தினத்தையே சாரும்''.

காலப் பிரஜைகளாக்க முடியும் எனவே ஆசிரியர்களை நிர்வாகக்காரணங்களுக்காக இடமாற்றஞ் செய்வதால் வருங்காலச் சந்ததியினர் பெரிதும் பாதிக்கப்படுவர்.

இவ்வாறு தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு. மூ. சி. சீனித்தம்பி இதே கல்லூரியில் கடந்த 48 ஆண்டுகள் ஆசிரியையாயக் கடமையாற்றி ஒய்வு சீனித்தம்பி இடமாற்றங்கள் காரணமாக அரசியல் பாடசாலைகளில் நுழைகின்றது என்றும் அந்நிலைமை திருத்தப்பட வேண்டுமென்றும் கூறினுர். இளைப்பாறிய தலைமைஆசிரியர் திரு. க. முருகேசு உட்படப்பலர் உரையாற்றினர்.

திருமதி சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார்.

## 'உவமைக் கவிஞர் கந்தவனம்'

### நூல் அறிமுகவிழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஒரு கவிஞனல் அவன் பிறந்த ஊரும் நாடும் உலகப் புகழ்பெறுகின்றன. அவன் படைத்த இலக்கியங்கள் நிலைத்துநிற்கும் வரைக்கும் அவன் பிறந்து வாழ்ந்த ஊரும் மக்கள் நெஞ்சிலே நிலைத்துநிற்கிறது. ஆகவே கவிஞர்கள் தங்கள் பெயருடன் பிறந்த ஊரின் பெயரையும் சேர்த்து எழுதுதல் சாலச் சிறந்ததாகும்.''

இவ்வாறு கவிஞர் வி. கந்தவனம் எழுதிய 'கீரிமலையினிலே' என்னும் காவிய நூலின் அறிமுக விழாவின் போது ஆசியுரை வழங்கிய சாவகச்சேரி முன்னுள் எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் ''ஈழத்திலே சிறப்புமிக்க கவிஞர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் ஐந்தாறு மிகச் சிறந்த கவிஞர்களைத் தெரிவுசெய்தால் நிச்சயமாக கவிஞர். கந்தவனமும் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவார்'' என்று கூறினுர்.

ஆசிரியர் திரு. செல்லையா தலைமைவகித்த இவ்விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய இரசிகமணி கனக செந்திநாதன் பேசும்போது ''வேறு எந்தப் புலவரோ எழுத்தாளரோ கையாளாத புதிய புதிய உவமைகளை, கவிஞர் வி. கந்தவனம் கையாண்டுள்ளார். பாயிற் பனங்களியும், பலாலித் தக்காளியும், சாவகச்சேரிப் புழுதி மண்ணும், செம்பாட்டுச் சிவந்த மண்ணும், கவிஞரால் உயர்ந்த கவிதை உவமைகளாய் விட்டன. இவரை உவமைக் கவிஞரென்றே புகழலாம்'' என்றும் கூறினுர்.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை பேசும்போது ''பொதுமக்கள் வாயில் அன்ருடம் அடிபடும் சாதாரண சொற்களை வைத்தே உயர்ந்த கவிதைகள் ஆக்கும் ஆற்றல்வாய்ந்தவர்கள் புலவர்கள். அந்தவொரு ஆற்றலால்தான் கவிஞர்கள் ஏனையோரைவிடச் சிறந்தவர்களாகக் கருதப்படுகிருர்கள். இன்றைக்கு ஈழத்திலே கவியரங்க மேடையிலே தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்டுள்ளதால் கவிஞர் கந்தவனம் பேரும் புகழுடனும் திகழ்கின்ருர். ஈழநாட்டிலே காணப்படும் போலிச் சலசலப்பையும், ஒன்றும் தெரியாதுவிட்டாலும் தெரிந்ததுபோல நடிக்கும் வெற்றுத்தனத்தையும் 'கீரிமலையினிலே' என்ற காவியத்தில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்'' என்ருர்.

வித்துவான் சபாரத்தினம் பேசும்பொழுது ''தமிழ்மக்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் ஒழிய வேண்டுமாயின் 'கீரிமலையினிலே' போன்ற நூல்கள் வெளிவரவேண்டும் என்றும் கவிஞர்கந்தவனம் ஆற்றல் மிக்க ஒரு கவிஞர்'' என்று கூறினுர்.

நுணுவில் மேற்கு கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற இவ்விழாவின் போது நுணுவில் வீரபத்திரர் இளந்திரையன் மன்றத்தினரால் ஒரு வாழ்த்துப் பாமலர் கவிஞருக்கு வழங்கப்பட்டது. விழாவின் இறுதியில் 'கீரிமலையினிலே' என்னும் வில்லுப்பாட்டு, வீரபத்திரர் இளந்திரையன் மன்றத்தினரால் கவிஞர் வே. ஐயாத்துரையின் அனுசரணையுடன் நடைபெற்றது

## சொற்பொழிவு

பருத்தித்துறை, வியா

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டம் இம்மாதம் 18ந்திகதி காலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்கர் ஆர். நித்தியானந்தன், க. பொ. த.(உயர்தர) வகுப்புக்களில் விஞ்ஞானம் போதிக்கும்முறை என்னும் விடயம்பற்றி உரை நிகழ்த்துவார்.

# யுத்தம் ஒழிந்த பின்னும் பஞ்சம் தீர்ந்தபாடில்லை

## பியாப்ரா மக்களின் நிலைமை

ஒவேறி (கிழக்கு நைஜீரியா) மே 14

நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற பியாப்ரா மீட்கப்பட்ட பின்னர் அங்கு யுத்தகால அடையாளங்கள் மறைந்துகொண்டிருந்த போதிலும் அப்பகுதியில் வாழும் ஈபோ மக்கள் மத்தியில் யுத்தத்தின் வடுக்கள் மிக ஆழமாகவே பதிந்துவிட்டிருப்பது கண்கூடாகத் தெரிகின்றது.

பிரிந்து சென்ற இந்தப் பழைய கிழக்கத்திய ராஜ்யத்தில் மீண்டும் உயிர்த்துடிப்பின் பசுமை சந்தை நகர்களிலும், கிராமப்பகுதிகளிலும் மிளிரத் தொடங்கியுள்ளன. பியாப்ராவைப் பீடித்திருந்த பஞ்சம் ஒரு வழியாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. என்ருலும் அங்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகள் இன்னும் தீர்ந்தபாடு இல்லை, ஈபோ மக்கள் வாழும் கீழ் மத்திய ராஜ்யத்தில் கஷ்டங்களும், பற்ருக்குறைகளும் இன்னும் முற்ருகத் தீர்ந்துவிடவில்லை. விசாலமான முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிவாரண வேலைகள் காரணமாக நிலைமை சீரடைந்துவருகின்றது.

யுத்தத்தின்போது நொறுக்கப்பட்ட வாகனங்கள் தகர்க்கப்பட்ட வீடுகள், மின்சாரக் கம்பங்கள் யாவும் இன்னும் அப்படியே காணக்கூடியவையாயிருக்கின்றன. பின்வாங்கிச் சென்ற பியாப்ராப் படைகளால் சேதப்படுத்தப்பட்ட பாதைகள் யாவும் திருத்தப்பட்டுள்ளன. சந்தைகளில் பொருட்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இங்கு மாமூல் நிலைமை ஏற்படுவதற்கு இரண்டு முக்கிய பிரச்னைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. உணவுத் தேவையும், பணத் தேவையுந்தான் அவையிரண்டும். நகர்ப்புறங்களைவிடக் கிராமவாசிகள் தான் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

கிழக்கு மத்திய ராஜ்யத்தில் இன்னும் 50,000 குழந்தைகள் போஷாக்கின்மைக்காகச் சிகிச்சை அளிக்கப்படுகிருர்கள்.

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி ''தேர்தல் போட்டி - 1970'' ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானுலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

**கேள்விகள்:**

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள சுமாஜனக் கட்சி, இ. தி. க.மு கட்சி என்பன.

பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்

'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

### 1970 தேர்தல் போட்டிக் ''கூப்பன்''

### 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களின் கொள்கைகளும் திட்டங்களும்


மணிவாக்கு

இன்னலிலிருந்தும் துன்பத்திலிருந்தும் தான் நாடுகள் பிறக்கின்றன. —மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 1-ந் திகதி (15-5-70)


## திரு. கிரியின் வெற்றி

இந்தியாவின் ஜனாதிபதியாக திரு வி. வி. கிரி தெரிவுசெய்யப்பட்டது சட்டப்படி செல்லுபடியாகுமென்று இந்திய சுப்ரீம்கோட்டார் அளித்துள்ள தீர்ப்பு, திரு. கிரியைவிட பிரதமர் இந்திராகாந்தியின் வெற்றியென்று கருதலாம். இந்தத் தீர்ப்பு வேறுவிதமாக இருந்திருப்பின் இந்தியாவின் அரசியல் நிலையே பெரும் குழப்பமாகியிருப்பதுடன் திருமதி இந்திரா காந்தியின் நிலைமை மிகவும் பலவீனமடைந்திருக்கும். ஏனெனில் ஜனாதிபதி பதவிக்கு திரு கிரியை ஆதரித்ததின் மூலம், இந்திரா தனது எதிர்கால அரசியல் வாழ்வையே பணயம் வைத்தார். தேர்தலில் கிரி அவர்களுக்குக் கடும்போட்டியிருந்தது. அந்தப் போட்டியை சமாளித்து அவர் வெற்றிபெற்றதே பெரிய காரியம் பின்னர் அந்தத் தேர்தலே செல்லாதென்று நீதிமன்றத்தில் நால்வர் வழக்குத் தொடர்ந்தனர். இதிலும் திரு. கிரி வெற்றி பெற்றதன் மூலம் பிரதமர் இந்திராகாந்தியின் கை வலுப்பட்டு, 'சிண்டிகேட்'டின் கை முற்றும் பலவீனமடைந்துள்ளது.

தனிப்பட்டமுறையில் இந்த வழக்கின் காரணமாக ஜனாதிபதி கிரியின் புகழ் உயர்ந்ததுடன், பொது மக்களிடையே அவரது செல்வாக்கும் மேம்பட்டுள்ளதென்பது உண்மை: அவர் ஒரு சாதாரண பிரஜையைப் போல் நீதிமன்றத்திலே தோன்றி நான்கு நாட்கள் குறுக்கு விசாரணைக்கும் தம்மை உட்படுத்திக்கொண்டார் சர்வாதிகார ஆட்சி நடக்கும் ஒரு நாட்டிலே இப்படி நினைக்கவும் முடியாது. நாட்டின் அதிபரை எதிர்ப்பவர்கள் சுட்டுக் கொல்லப்படக்கூடும் சட்டத்தின் மேன்மையையும் இந்திய ஜனநாயகத்தின் புனிதத்தையும் இந்த வழக்கும் தீர்ப்பும் உலகுக்கு...

அவ்வளவு சுலபமானதல்ல, பிரிட்டன் ஒரு ஜனநாயக நாடாயினும் அதற்கு ஓர் அரசி இருக்கின்றார். அவர் தகராறுக்கு அப்பாற்பட்டவர், அதனால் அவர் மூலம் நாட்டில் ஒரு ஸ்திரத்தன்மை நீடிக்கின்றது. மன்னர் ஏதாவது தவறுசெய்யின், அவரை நீக்கவும் அங்கு மக்களுக்கு உரிமையும் அதிகாரமும் இருக்கிறதென்பதை பிரிட்டனின் சரித்திரத்தில் பல சான்றுகளுண்டு. ஜப்பானிலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பார்லிமெண்ட் சபை இருப்பினும் ஒரு மன்னரே நாட்டின் தலைவராக இருந்துவருகின்றார். சென்ற யுத்தத்தில் ஜப்பானுக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டும், அவர்கள் தங்களுக்கு மன்னர் வேண்டுமென்று வற்புறுத்தி பின்னர் அதிக ஆச்சரியமான முறையில் பலதுறைகளிலும் முன்னேறி வருவதைப் பார்க்கின்றோம்.

இந்தியாவிலே இன்று அமைதியற்ற நிலைமைபல இடங்களிலும் ஏற்பட்டு வருவதைப் பார்க்கையில் அங்கு அரசியலில் ஏதோ பெரியகுறை இருக்கிறதென்பது கண்கூடு. இதன் அடிப்படைக் காரணங்களை பரிசீலனைசெய்து, அரசியல் சட்டத்தைமீண்டும் அடியோடு திருத்தவேண்டியசமயம் வந்துவிட்டது. இப்பொழுது ஜனநாயகம் என்று கூறப்படும் முறையின்படி, 51பேர் 49பேரை நிரந்தரமாக அடக்கி ஆளக்கூடியதாகவுள்ளது. இதனால் ஏற்படும் விபரீதங்களையும், சிறுபான்மை மக்கள் படும் அவதிகளையும், அமைதிகுலைவதையும்நாம் பார்க்கின்றோம். உண்மையான ஜனநாயகமென்பது, கடைப்பட்டவருக்கும் கடைத்தேற்றமென்ற அடிப்படையில், ஒருதனிப்பட்டவரின் உரிமையையும் நன்மையையும் பாதுகாக்க வேண்டும். அதற்கான முறையில் அரசியல் அமை...

உடுவில் தொகுதியில் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வி. தர்மலிங்கம் விடுத்துள்ள தேர்தல் அறிக்கையிலிருந்து ஒரு சில பகுதிகளை இங்கு தருகின்றோம்:

**வடபகுதியில் போட்டியிடும் கூட்டணி வேட்பாளர்கள், சுயேச்சையாளர்கள் ஆகியோரின் தேர்தல் அறிக்கைகளிலிருந்து சில பகுதிகளை வாசகநேயர்களுக்குத் தருகிறோம்.**

தமிழ்க்காங்கிரசினதும் சமஷ்டிக் கட்சினதும் முதுசொம் எனக் கூறப்படும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றிப் பிரச்னையின் நிலைதான் என்ன? இவ்வுரிமைகளைப் பாதுகாக்கவே தமிழ் வகுப்புவாதம் தோன்றியதாகக் கூறப்படுகிறது. இவ்விரு கட்சியினதும் ஆதிக்கம் நிலவிய காலப்பகுதியில் தமிழ் பேசும் மக்களின் நிலைமை குன்றியமை அவற்றின் அரசியல் தோல்வி அடைந்ததற்கான இறுதியான, உறுதியான



மறுக்கமுடியாத அத்தாட்சியாகும் பெரும்பான்மைச் சமூகத்தவரின் வகுப்புவாதம் சிறுபான்மையினரின் வகுப்புவாதத்திற்கும் ஒரு நாளும் பரிகாரணமாகாது; புதிய ஆபத்துக்கள் ஏற்படாது தடுக்கச் சாதாரணமான வெளிப்படையான இந்த உண்மையை இப்பொழுதே கற்றுக்கொள்ள வேண்டும்:

வது ஜனநாயக உரிமைகளுக்கான தமிழரின் போராட்டத்தை ஒருபடி முன்னேறச் செய்யும்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றுவதன் மூலம் உங்களுடைய உண்மையான ஆதரவாளர்களையும் கூட்டாளிகளையும் உற்சாகமூட்டுவீர்கள்; மேலும்உங்களுடைய இன்றைய தலைமை வகித்த பிற்போக்கு நிலை காரணமாக பெரும்பாலும் இவ்வளவு காலமும் வேண்டாவெறுப்பாக அல்லது எதிரிடையாக இந்த முகாமிலிருந்த ஆட்களின் அனுதாபத்தையும் அக்கறையையும் பெறுவீர்கள், ஏராளமான சாத்தியக் கூறுகளைக் கொண்ட ஒரு புதிய உலகம் உங்கள் முன்னிலையில் உடனடியாகத்தோன்றுகின்றது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமில் நீங்கள் முற்றுகவும் பூரணமாகவும் பங்குபற்றி முழுமூச்சாக முயற்சி செய்தால் இந்த முகாமில் புதிய சக்தி கிளம்பும். காலப்போக்கில் இந்த முகாம் உங்களின் விசேட கோரிக்கைகளை தனது கொடியில் பொறிக்க வேண்டி நேரிடும், நீங்கள் இதயபூர்வமாக பங்குபற்றுதல், அக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதற்கான உத்தரவாதமாகும். ஆனால் இவை எல்லாம் எதிர்கால நிகழ்ச்சியாகும். புரட்சிகள் ஆக்கப்படும் மனித முன்னேற்றத்திற்கான சமூகத்தின் பாதை துப்பரவு செய்யப்படும், அதாவது வரலாறு உருவாக்கப்படும் அணிகளில் நீங்கள் சேர்ந்த பின்பு நடைபெறுபவையாகும்.

### உண்மையான ஐக்கியம்

தமிழ் பேசும் மக்கள் ஏதாவதொரு தமிழ் வகுப்புவாதக் கட்சியின்கீழ் எவ்வளவுதான் ஐக்கியப்பட்டிருந்தாலும் அவர்களின் நியாமான ஜனநாயக உரிமைகளைத் தமிழ் வகுப்புவாதத்தினால் பேணிப்பாதுகாக்க முடியாது என்பது வலு...

#### கருத்துள்ள ஒரு போராட்டம்

நிகழ்காலத்தில் இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது யாது? தமிழ்க் காங்கிரஸ் சமஷ்டிக்கட்சி...

உடுவில் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு சின்னத்துரை பொன்னம்பல வன்னிய மாப்பாண கதிர்காம முதலியார் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் சில பகுதிகள் வருமாறு:

இலங்கை முழுவதிலுமுள்ள, சகல மக்களும் சாதி, மத, (சமய), இன வேற்றுமையின்றி சர்வாதிகாரமில்லாத, (சனநாயக) மக்கள் ஆட்சியின்கீழ் ஒற்றுமையாக வாழத்திட்டங்களை அமைத்தல், அவற்றைச் செயல்முறைக்குக் கொண்டு வருதல்.

இலங்கைவாழ் சகல இன மக்களும் ஒருவித கஷ்டமுமின்றி அரசாங்கத்தோடு தொடர்புகொள்ளவும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் அரசமொழியாக வழங்கப்படவும் நடவடிக்கை எடுத்தல். இதை நடைமுறைக்குக்கொண்டுவர பெரும்பான்மை சிங்கள மக்களது ஆதரவைப்பெற ஆவன செய்தல்.

இலங்கையிலுள்ள மக்களின் சராசரி மாத வருமானம், கிட்டத்தட்ட ரூபா ஐம்பத்தைந்து வரையில் குறைந்திருப்பதைக் கூட்டவும், ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களின் சராசரி வருடவருமானம் கிட்டத்தட்ட ஆயிரம் தங்கப் பவுணுக்கு கூடவாக இருப்பதை மக்களுக்குணர்த்தி, அதை அதிகரிக்கவும் பொருளதாரத்திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருதல்.

படித்த வாலிபரின் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க திட்டங்களை வகுத்தல், மகாவலி கங்கை நீர் திசை திருப்பும் திட்டங்களிலும், மத்திய, தென் இலங்கையின் வேறு திட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும், வடகீழ் மகாணங்களிலுமுள்ள வேலையற்ற படித்த வாலிபருக்கும், தொழிலாளருக்கும் இடமளிக்க அரசாங்கத்தை வற்புறுத்தல்,

உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு அவ்வவ்விடங்களில் மத்திய அரசாங்கத்தால் அறவிடப்படும் வருமான...

ஊழலைத்தடுக்க அசைக்கமுடியாத சிறந்த சட்டங்களை வகுத்தல்.

சகல தனியார் பாடசாலைகளுக்கும் பாரபட்சமின்றி அரசாங்க உதவி வழங்கச் செய்தல்,

சுருட்டுத்தொழிலை ஒரு குடிசைக் கைத்தொழிலாக பிரகடனம் செய்ய அரசாங்கத்தைக் கேட்டல்; இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர்சங்கத் தூதுக்கோஷ்டி எனது (திரு, முதலியார்) தலைமையில் நிதிமந்திரியையும். தொழில்மந்திரியையும் வருமானவரித் தலைவரையும் கண்டு பேசியதன் பயனாக 1966-ம் ஆண்டு தொடக்கம் சுருட்டுத் தொழிலுக்கு விதிக்கப்பட்ட உற்பத்தி வரி (Turn over Tax) 5 வீதத்திலிருந்து ஒரு வீதமாக குறைக்கப்பட்டது இதை முற்றாக நீக்கப்பட வேண்டிய நடவடிக்கை எடுத்தல்.

யாழ். குடாநாட்டுப் பனைமரக் கருப்பநீரிலிருந்துஇலாபகரமான முறையில் (commercial basis) சீனி உற்பத்தி செய்யலாமோவென ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கு படி அரசங்கத்தை கேட்டல்.

பள்ளிக்கூட மாணவர்களிடம் பரவிவரும் மதுவருந்தும் மழக்கத்தை தடைசெய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்தல்.

இந்தியாவில் இருந்து தரமான தமிழ்ப் படங்களை மாத்திரம் இறக்கு மதி செய்ய அனுமதி அளிப்பதுடன் இங்கு தமிழ்ப்படங்களை தயாரிப்பதற்கு கலைஞர்களுக்கு ஊக்கமளிப்பதற்கு அரசாங்கத்தை வற்புறுத்தல் இதனால் இங்கு தமிழ்த் திரைப்படக்கலை வளர்வதுடன், இதன் மூலம் பல தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களும்கிடைக்க ஏதுவாகும்.

இலங்கையில் சட்டசபை தொடங்கிய காலந்தொடக்...



## கார்சாரதிபடுகொலை: பூநகரி காட்டில்

### காரும் சடலமும்

யாழ்ப்பாணம், வியாழன் மீசாலையைச் சேர்ந்த கார் சொந்தக்காரரான செல்லையா சிதம்பரராசா என்பவர் பூநகரியிலுள்ள காட்டில் படுகொலைசெய்யப்பட்டார். பூநகரி மட்டுவில் நாடு பகுதியில் உள்ள பள்ளக்குடி என்ற இடத்தில் உள்ள காட்டில் அவரது சடலமும், காரும் கண்டு பிடிக்கப்பட்டன. இன்ஸ்பெக்டர் இராஜேஸ்வரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இதுபற்றி விசாரணை செய்துவருகிறது.

சி.என். 6500 இலக்கமுடைய காரின் சொந்தக்காரரான சிதம்பரராஜாவின் சடலத்தில் சாரம்மட்டுமே காணப்பட்டது. மட்டுவில் நாடு வாசியான வேலாயுதம் என்பவர் முதலில் காரைக் கண்டதாகவும், பின்னர் கிராம சேவகர் சிறிது தூரத்திற்கு அப்பால் சடலத்தைக் கண்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

பதில் மாஜிஸ்திரேட் திரு. எஸ். கனகரத்தினம் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று மரண விசாரணை நடத்தினர். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சில்வாவும், இன்ஸ்பெக்டர் இராஜேஸ்வரனும் சென்றிருந்தனர்.

கிராம சேவகர் சடலத்தைக் கண்ட பின்னர் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தார். கார் சுவிச்சாவியைக் காணவில்லையாம் 2 கற்களிலும், துணி ஒன்றிலும் இரத்தக் கறை காணப்பட்டதாகவும். கொலையுண்டவரின் தலையில் சாயம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி வைத்திய அதிகாரி டாக்டர் மயில்வாகனம் பிரேதபரிசோதனை நடத்தினர்.

கொலையுண்டவரின் மைத்துனர் செல்லையா மயில்வாகனம் சடலத்தை அடையாளம் காட்டினர்.

விசாரணை நடத்திய பதில் மாஜிஸ்திரேட் திரு. கனகரத்தினம் கொலை எனத் தீர்ப்பளித்து, பொலிசாரை தொடர்ந்து புலன்விசாரணை செய்து இம்மாதம் 31ந் தேதி யாழ்ப்பாணக் கோர்ட்டில் அறிவிக்குமாறு உத்தரவிட்டார்.

மரணவிசாரணையில் வேலாயுதம், கிராம சேவகர், செல்லையா மயில்வாகனம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

## 'பரீட்சையைப்பின்போட்டு சகலரையும் அனுமதிக்கவும்'

யாழ்ப்பாணம், வெள்ளி ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளின் 3-ம்தர விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் பரீட்சைக்கு சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலுள்ள விஞ்ஞான ஆய்வுகூட ஊழியர்கள் தோற்றமுடியாதென்ற அரசாங்கத்தின்கட்டுப்பாட்டை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஊழியர்கள் சங்க வடபிரதேசக் கிளை ஆட்சேபித்துள்ளது. முதலாம் தர விஞ்ஞான ஆய்வுகூட ஊழியர்கள் மட்டும் இப்பரீட்சையில் தோன்றலாம் என்பது அரசாங்கத்தின் நிபந்தனையாம்.

இதுசம்பந்தமாக சுவீகரிக்...

யோடு இருந்து சிறந்த சேவை செய்துகொண்டு வருபவர்களை பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின்பு ஆய்வுகூட ஊழியர் எனப் பதவி குறைத்ததோடு மில்லாமல் இப்போது மேற்படி பரீட்சைக்கு அவர்கள் தோற்றுவதற்கும் முடியாமல் செய்துள்ளது. இது மிகவும் கவலைக்குரியதாகும்.

மேற்படி ஊழியர்களை 1ந் தரத்திற்குப் பதவி உயர்வு கொடுப்பதற்குப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று 10 வருடங்கள் கழிந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1ந் தர ஊழியர் பெறக்கூடிய...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யது நினைக்கவும் முடியாது. நாட்டின் அதிபரை எதிர்ப்பவர்கள் சுட்டுக் கொல்லப்படக்கூடும் சட்டத்தின் மேன்மையையும் இந்திய ஜனநாயகத்தின் புனிதத்தையும் இந்த வழக்கும் தீர்ப்பும் உலகத்துக்கு நிரூபித்துள்ளன, அந்தமட்டில் இது வரவேற்கத்தக்கதே.

ஆனல் ஒரு முக்கிய விஷயத்தைக் கவனிக்கவேண்டும். ஒரு நாட்டின் தலைவராக விளங்குபவர், நாட்டு மக்கள் அனைவரின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பெற்றவராகவும், நாட்டின் ஒற்றுமைச் சின்னமாகவும் விளங்கவேண்டும். அப்படி இல்லாமலிருப்பின், அவருக்கு எதிர்ப்புகள் அதிகரிக்கவும் நாட்டின் ஒற்றுமை குலையவும், முடிவில் நாடு பிளவுபட்டு, அமைதி குலைந்து அந்நியருக்கு அடிமைப்படும் நிலையும் ஏற்படக்கூடியதாக இருக்கும். நீதிமன்றத்தில் திரு. கிரி அவர்கள் வெற்றிபெற்றாலும் அவரை அநேகமாக நாட்டில் பாதிப்பேர் ஆதரிக்கவில்லையென்பது தேர்தலில் பதிவான வாக்கு விவரங்களிலிருந்தே தெரிகிறது. அவருக்கு மாறாக வாக்களித்தவருக்கு, அவர் மீது எப்படி நம்பிக்கையும் விசுவாசமும் இருக்கமுடியும்?

இதற்கான அடிப்படை குறை, இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்திலுள்ளதென்பது உண்மையே. பிற நாடுகளின் அரசியல் திட்டங்களைப் பார்த்து, இந்திய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டது, இதில் பல குறைகள் உள்ளதைக்கண்டு அவ்வப்போது பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. நாட்டின் தலைமைப் பதவி வகிப்பவர் தகராறுக்கு அப்பாற்பட்டவராகவும், ஒற்றுமையின் சின்னமாகவும் இருக்கவேண்டுமென்ற முக்கியமான நிபந்தனையைப் பூர்த்திசெய்ய, இப்போதுள்ள இந்திய அரசியல் ஏற்பாடு தவறிவிட்டது இந்தப் பெரிய குறையை கிரியின் தேர்தலும், பின்னர் அவர் மீது தொடரப்பட்ட வழக்கும் அம்பலமாக்கியுள்ளன. நாட்டின் அமைதியும், ஸ்திரத்தன்மையும் பாதுகாக்கப்படவேண்டுமாயின் தலைவர் பதவி வகிப்பவர்மீது பொதுமக்கள் அனைவருக்கும் விசுவாசமும், நம்பிக்கையும் ஏற்படும்படியான ஒருமுறையை அரசியல் அமைப்பிலேயே வகுக்க வேண்டியது இன்றியமையாதது.

இதற்கு என்னவழி என்பது முக்கிய கேள்வி. பதில்

மென்பது, கடைப்பட்ட வருக்கும் கடைத்தேற்றமென்ற அடிப்படையில், ஒருதனிப்பட்டவரின் உரிமையையும் நன்மையையும் பாதுகாக்கவேண்டும். அதற்கான முறையில்அரசியல் அமைப்பை இந்தியாவில் மட்டுமன்றி நம்இலங்கையிலும் திருத்தி அமைக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. இதை எவ்வளவு விரைவில் உணர்ந்து, அதற்கானவற்றைச் செய்கின்றேமோ அவ்வளவு நல்லது. இன்றேல் பொது மக்களிடையே அதிருப்தி அதிகரித்து புரட்சிகள்ஏற்படுவதைத் தடுக்கமுடியாது.

## அரசியல் மோதலில் கைகலப்பு

திருக்கோணமலை, வியா

திருக்கோணமலை கூட்டுறவுச் சங்கத்தில் இரு தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட கட்சிக் கருத்து மோதல் கைகலப்பில் முடிந்தது

இதைப்பற்றிக்கூறப்படுவதாவது:- முன்பு கூட்டுறவு சங்கத்தலைவராக இருந்த ஒருவர் வேறொரு கூட்டுறவு சங்கக் கிளைத்தலைவரிடம் தனக்கு விருப்பமான கட்சிக்கும் அவரது வாக்கை அளிக்கும் படி வற்புறுத்தினராம். இதனல் கருத்து மோதல் பலத்து இருவருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.

## தேர்தல் நியமனம்

கோட்டை,வியா

கட்டானத் தேர்தல் தொகுதி நியமனப்பத்திரம் வருகிற ஜூன் மாதம் 7ந் திகதி கொழும்பு கச்சேரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தொகுதியில் போட்டியிடவிருந்த வேட்பாளர் திரு. பெர்னன்டோபுள்ளேயின் மரணம் குறித்து இத் தொகுதித் தேர்தல் பின் போடப்பட்டது தெரிந்ததே. ஏற்கனவே வேட்பாளராக முன்வந்துள்ள திருவாளர்கள் டபிள்யூ. விஜய பால மெண்டிஸ் (யூ என் பி) கே சி டி சில்வா [எஸ் எல் எவ் பி] புதிதாக நியமனப்பத்திரம் தாக்கல் செய்யத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

வாதக் கட்சியின்கீழ் எவ்வளவுதான் ஐக்கியப்பட்டிருந்தாலும் அவர்களின்நியாமான ஜனநாயக உரிமைகளைத் தமிழ் வகுப்புவாதத்தினல் பேணிப்பாதுகாக்க முடியாது என்பது வலுவான உண்மையாகும்; விரும்பத்தக்கதல்லவாக இருக்கலாம். ஐக்கியம் எப்பொழுதும் ஏற்பட்டுள்ளது. ஒரு வகுப்புவாதக் கட்சியின் கீழ் ஒவ்வொரு தரமும் புதிதாக தமிழர்கள் அணிதிரள, மேலும் ஒரு தாக்குதல் ஏற்பட்டதுடன் இருந்த உரிமைகளும் பறிக்கப்பட்டன.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான போராட்டம் முழுதையும் நீண்டகால ஆதிக்கம் செலுத்திய தமிழ்க் காங்கிரசும் சமஷ்டிக் கட்சியும் கேவலமாக்கி, உண்மையான கூட்டாளிகளின் அனுதாபத்தை இழந்துள்ளன. மேலும் சரித்திரரீதியாக ஒரு நியாயமான இயக்கத்தைப் பகிடிக்கும் வெறுப்புக்கும் ஆளாக்கியதுடன் தமிழ் பேசும் மக்களை நாடு பார்த்துச் சிரிக்கும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளனர். எனவேதான், அவர்கள் யாழ்ப்பாணத்தில் மகாராசாக்கள் போலக்காட்சியளித்துவிட்டு கொழும்பில் பிச்சைக்காரர்போல இரந்து நிற்கின்றனர்.

தமிழ் மக்களிடையேயும் சிங்கள மக்களிடையேயும் உள்ள முற்போக்கு ஜனநாயக, சோஷலிஸ புரட்சிகர சக்திகளின் அசைக்கமுடியாத, அழிக்க முடியாத ஐக்கியத்தை உருவாக்குவதற்குப் பொது எதிரியை எதிர்க்கும் இந்தப் போராட்டத்தைப் பொதுப்போராட்டமாக்குவோம். எத்தனையோ இடர்களின் ஊடாக உங்களின் வெற்றிக்கான கூட்டணி இதுவேயாகும். தேயிலை, றப்பர், தென்னந் தோட்டங்களிலும் கைத்தொழில் நிதித்துறைகளிலுமுள்ள தமது முதலீடுகள் மொழியுரிமைக்காகவும் பிரஜாவுரிமைக்காகவும் நடாத்தப்படும் போராட்டத்திலும் பார்க்க முக்கியமானதெனக் கருதும் தமிழர்கள் யூ. என். பி. யுடனும் அதனுடைய சகாக்களுடனும் நிற்கட்டும்! ஆனல் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டம் முக்கியமானது எனக் கருதும் தமிழ் பேசும் மக்களுக்கு நாம் கூறுகிறேம்: உங்களுடைய இடம் எங்களுடைய முகாமிலாகும் முன்னேற்றத்திற்கும் சோஷலிசத்திற்குமானமுகாமாகும். யூ. என். பி. ஐக்கிய முன்னணி என்றஅடிப்படையில் ஏற்பட்டுள்ள தேசியப் பிரிவைப்போல தமிழர்களிடையேயும் பிரிவு ஏற்படு

## கருத்துள்ள ஒரு போராட்டம்

நிகழ் காலத்தில் இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது யாது? தமிழ்க் காங்கிரஸ் சமஷ்டிக்கட்சி ஆகியவற்றின் தலைமையில் உங்கள் தலைவிதியாகஇருந்த போலிப் போராட்டத்தையும் கேலிக் கூத்தையும் கைவிட்டு ஒரு கருத்துள்ள போராட்டத்தில் ஈடுபட நீங்கள் உறுதி பூண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டும். உடுவில் தொகுதியில் என்னைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் இதைச் செய்ய முடியும். ஐக்கிய முன்னணி தொழிற்சங்கங்கள், விவசாயிகள்சங்கங்கள், வாலிபர் நிறுவனங்கள் பல்கலைக் கழகங்கள் மாணவர் மற்றும் மக்கள் இயக்கங்கள் ஆகியவற்றில் இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமுள்ள நண்பர்களும் சகாக்களும் இதைத்தான் கோருகின்றனர்.

இவ் விண்ணப்பத்தை முடிப்பதற்கு முன்பு சொந்த முறையில் ஒரு விடயத்தை கூற விரும்புகிறேன். நான் யாழ்ப்பாணத்தில் பிறந்து யாழ்ப்பாணத்தை பின்னணியாகக்கொண்டவனக இருப்பதுடன் இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைமையில் அமைவாகிஇருக்கும் புரட்சிகர சிங்களத் தொழிலாளர்கள் விவசாயிகள் படித்த சோஷலிச வாதிகள் ஆகியோரைக் கொண்ட இயக்கத்துடன் நீண்டகாலமாகவும் நெருக்கமாகவும் தொடர்புடையவனக இருப்பது எனக்கு ஒரு தனி நிலையை அளிக்கின்றது. வடமாகாணத்தில் போட்டியிடும் எந்த அபேட்சகருக்கும் இந்நிலை கிட்டவில்லை. அந்த வரலாற்று முக்கியத்துவம் உடைய புரட்சி இயக்கத்திற்கு உங்களைச் சேர்ப்பதற்கான இயற்கைப் பாலமாக நான் அமைந்துள்ளேன். இந்த இயக்கம் உங்களினதும் உண்மையில் மனிதனதும் விடுதலைக்கான இயக்கமாகும். இப்பொழுது உங்கள் முன்னிலையில் பிரச்சினை நியாயமாகவும் தெளிவாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது இப்பொழுது உங்கள் முன்னிலையிலுள்ள சந்தர்ப்பத்தை ஏற்பதா அல்லது விடுவதா.


## தேர்த்திருவிழா

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் - பறுளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தேர்த்திருவிழா வரும் புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. இதனையொட்டி அன்றையதினம் வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் ஒரு மலரை வெளியிடவிருக்கின்றனர்.

...ருக்கும், இடமளிக்க அரசாங்கத்தை வற்புறுத்தல்.

உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு அவ்வவ்விடங்களில் மத்திய அரசாங்கத்தால் அறவிடப்படும் வருமான வரி, மதுவரி முதலானவற்றின் ஒருபகுதியாவது கொடுக்கும்படிசொ ்சி கமிஷனர்களால் செய்த அறிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவர மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தல்.



## "சுருட்டுத்தொழிலுக்கு ஒரு கோர்ப்பரேஷன்"

யாழ்ப்பாணப் புகையிலையையும் சுருட்டையும், ஐரோப்பா மத்திய ஆசியா, முதலிய பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து பணவருவாயைக்கூட்ட அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதர் நிலையங்கள்மூலமாக முயற்சி எடுக்குமாறு மத்திய அரசாங்கத்தைக் கேட்டல் மேற்படி நாடுகளிலுள்ளவர்கள் எந்தத்தர புகையிலையையும் சுருட்டையும் விரும்புகிறர்களென்றுஅறிந்தபின் அந்தவிதப்புகையிலையை, இந்நாட்டில் உற்பத்தி செய்யலாமென்று அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்க அரசாங்கத்தைக் கேட்டல். தொழிலாளர் நலன் கருதிசுருட்டுத் தொழிலை ஒரு கோப்பரேசன் மூலம் இயங்க நடவடிக்கை எடுத்தல்.

இலங்கை மக்களிடையே அடிக்கடி ஏற்படும் காணி எல்லைத்தகராறுகளையும் சச்சரவுகளையும் அதனல் அவர்களுக்கு ஏற்படும் கிறிமினல் சிவில் வழக்கு முதலிய அநாவசியச் செலவையும் நீக்க அவுஸ்திரேலியா, கனடா மலாயா நாடுகளிலுள்ளது போன்ற தலைசிறந்த காணிச்சட்டம், உறுதிச்சட்டங்குகளை அமுல் நடாத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்துவது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை வரைக்கும் றெயில் போக்குவரத்தை ஏற்படுத்த அரசாங்கத்தை கேட்டல்.

காங்கேசன்துறையைப் பெரிய துறைமுகமாக்க, அரசாங்கம் திட்டமிட்டுள்ளதால் காங்கேயன் துறையிலிருந்து தென் இந்திய றெயில் பாதை முடியுமிடமாகிய கோடிக்கரைக்கு ஒரு வாரத்தில் இரண்டு நாளாவது கப்பல்போக்குவரத்தை உடனடியாக அமைக்கநடவடிக்கை எடுத்தல்.

கைலஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் கூடிக் கொண்டே வருதலால், இவ்

கம்எல்லா தமிழ்ப் பிரதிநிதிகளாலும் அணிந்துவந்த தமிழ்ப் பண்பாடு கலாச்சாரத்தின் வெளியடையாள (சின்னம்)மாகியதலைப்பாகை, உத்தரிகம்அணிதல் முற்ருய் அழிந்துவிட்டது. திரு. அல்பிறட் தம்பிஐயா பிந்திநிதியாக இருந்த காலத்திலும் சிறிது பின்னரும் சட்டசபை பாராளுமன்றத் திறப்புவிழா முதலிய வைபவங்களிலாவது இவ்வுடைகள் சபைகளை அலங்கரித்தன. சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணுசலம், சேர் அம்பலவாணர் கனகசபை, சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி, திரு. நடேசபிள்ளை ஆகியோர் நாள்தோறும் அணிந்த உடை இதுவேயாகும். இந்த உடையை எல்லாத் தமிழ்ப் பிரதிநிதிகளும் விசேஷ வைபவங்களிலாவது அணியச்செய்தல்.

சுருங்கக்கூறின் அன்னியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பண்டைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் பாதுகாத்த முப்பெருந் தலைவர்களான அனகாரி தர்மபால, ஆறுமுகநாவலர், சேர் பொன்னம்பலம் இராமநாதனின் குறிக்கோளும் (லட்சியம்) கொள்கைகளுமே எனது குறிக்கோளும், கொள்கையுமாகும்.

நாங்கள் இப்பொழுது அனுபவிக்கும் எல்லாக் கஷ்டங்களுக்கும் மூலகாரணமாயிருத்தலால் அடிப்படை மனித உரிமைகள் சேர்க்கப்பட்டு பல்வேறு சாதி, சமய இனவேற்றுமையுள்ள இலங்கைவாழ் எல்லா மக்களும் அடிமைகளாயிராமல் சுதந்திரமாய் வாழக் கூடிய ஓர் அரசியல் சட்டத்தை விசாரணையின்பின் வகுக்க உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய விசாரணைக் குழுவொன்றை நியமித்து அதன்படி ஒரு புது அரசியல் சட்டத்தை நடவடிக்கைக்குக் கொண்டுவர ஆவன செய்தல்.

முதலாம் தர விஞ்ஞான ஆய்வுகூட ஊழியர்கள் மட்டும் இப்பரீட்சையில் தோன்றலாம் என்பது அரசாங்கத்தின் நிபந்தனையாம்.

இதுசம்பந்தமாக சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் ஊழியர்சங்க வடபிரதேசக் கிளைச் செயலாளர் திரு. ஆ. சண்முகம் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு எழுதியுள்ளகடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடடுள்ளார்.

"பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்குமுன் பாடசாலைகளில் ஆய்வுகூட உதவியாளர் என்ற பதவி கொடுப்பதற்குப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று 10 வருடங்கள் கழிந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1ந் தர ஊழியர் பெறக்கூடிய தொடக்கச் சம்பள அளவை இப்போது இவர்கள் பெறுகிறர்கள்.

எனவே உடனடியாக விண்ணப்ப முடிவுத் திகதியைப் பின்போட்டு, அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பாடசாலையிலுள்ள சகல விஞ்ஞான ஊழியர்களையும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க அனுமதி வழங்கவேண்டும்."

## தமிழ் நாட்டில் இல்லாத உரிமை ஈழத்தில் தமிழருக்கு உண்டு

### ம.பொ.சியே கூறுகிறராம்

தாவடி, வெள்ளி

தமிழ் நாட்டிலே தமிழுக்குக் கிடைத்த அந்தஸ்தும். பெருமையையும் ஈழத்திலே கிடைக்க வழிகள் செய்த பெருமை எங்களுடைய தமிழரசுக் கட்சியையே சாரும். ஈழம் வந்து திரும்பிய சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானக்கிராமணியார் தனது செங்கோல் என்ற பத்திரிகையில் கூட இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழினம என்ன உரிமைகளை இழந்துவிட்டது? என்று கேட்கின்ற தமிழரசுக் காங்கிரஸ்க் கட்சியினர். இதுவரை தமிழினத்துக்காக. மொழிக்காக ஏதாவது போராட்டங்களை நடத்தினர்களா? பாடுபட்டார்களா?.

இவ்வாறு நந்தாவிலில் நடந்த கருத்தரங்கில் கலந்துரையாற்றிய முன்னள் ஆட்சி மன்றஉறுப்பினர் உடுவில் தி. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய டாக்டர் திரு. கு. தம்பையா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. தருமலிங்கம் மேலும் பேசும் போது கூறியதாவது;-

"ஆட்சிமன்ற ஆசனங்களைப் பஞ்சணை மெத்தைகளென்று கருதியோ அன்றி சுகபோக வாழ்வை விரும்பியோ நாம் ஆட்சிமன்றம் செல்வதில்லை. தமிழினத்தின் தாழ்வு நிலையை மாற்றியமைத்துதன்மானமுள்ள தமிழினமாக வாழவழி கோலுவதே எமது நோக்கம் பண்டாரநாயக்காவுடன் செய்த பேச்சு வார்த்தையின் பின் அதாவது 1958-ம் ஆண்டின் பிற்பாடு சிங்களக் குடியேற்றம் நடைபெறவில்லை. திருகோணமலையிலே கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்குமுகமாக அரசாங்கம் காவல்போட்டிருக்கின்றது. இவற்றைஎல்லாம் செய்வித்த பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும். ஆட்சி மன்றத்திலே தமிழினத்தின் நலன்களுக்காக உழைக்கும் கட்சி தமிழரசுக்கட்சியே" என்கிறர்

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம், உடபட பலரும் பேசினர்.

## போராடி ...

(1-ம் பககத் தொடர்ச்சி]

அங்குஇலங்கையில் பாஷைப் பிரச்னை தீர்ந்துவிட்டது என்றுகூறி விட்டுத் திரும்பி வந்ததும் தமிழரசுக்கட்சியுடன் ஒப்பந்தம்செய்தார். அந்த ஒப்பந்தம் வடக்கு கிழக்கில் தமிழ்ஆட்சிமொழியாகவும் பிரதேச சபைகள் அமைத்து வடக்கு கிழக்கு பகுதிகளை ஒன்ருக இணைக்கவும் உகந்ததாக அமைந்தது. இவ் ஒப்பந்தத்தை ஐக்கியதேசியக் கட்சியும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் எதிர்த்ததன் பயனக கிழித்தெறியப்பட்டது"

## மூன்று மந்திரி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை உரிமைகள், கட்சியின் இலட்சியங்களை நிறைவேற்ற நீங்கள் தயாரானல் நாங்கள் உங்களோடு ஒத்துழைக்கத்தயார்என்றுசொன்னர்'. அதன்பின்தான் இரகசிய ஒப்பந்தம் எழுதப்பட்டது. ஒப்பந்தப்படி நாம் முழுவதையும் பெருவிட்டாலும், தமிழ்மொழி விசேட விதிச்சட்டத்தையும் பெற்றேம்'.

'மாவட்டசபை பிரச்னையில் நம்மை தேசிய அரசாங்கம் ஏமாற்றிவிட்டதுதான். மாவட்டசபை பிரச்னையால் மொழிப்பிரச்னை தீர்த்து வைக்கப்படும் என்று நம்பினேம். அதை குழப்பி விட்டார்கள் சிலதமிழ் அரசியல் தலைவர்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 15-ம்தில அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org